விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை (23.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

## ‘தோல்வியடையேன்’

## தோற்றால் அமைதியான ஆட்சி மாற்றம்-மகிந்த



(கொழும்பு)

*இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தோல்விய டையும் நிலை ஏற்பட்டால் வெற்றி பெற்ற தரப்பிடம் தனது அரசாங்கம் அமைதியான முறையில் ஆட்சியைக் கையளிக்கும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.*

எனினும் தான் தோல்வியடைய மாட்டேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரிட்டனிலிருந்து வெளியாகும் ஃபைனான்ஸியல் டைம்ஸ் நாளித

24ஆம் பக்கம் பார்க்க....

### சீரற்ற காலநிலை 4 லட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் மூவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் அனர்த்தங்களில் சிக்கிய ஒருவர் காணாமற்போயுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டார்.

சீரற்ற வானிலையால், 08 மாவட்டங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து 52 ஆயிரத்து தொள்ளாயிரத்து 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதால் மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

மேலும் அதிக மழையால் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரை குளத்தின் சகல வான்கதவுகளும் திறக்கப்பட

24ஆம் பக்கம் பார்க்க....

### காங்கேசன்துறைக்கு 2-ம் திகதி ரயில்

(கொழும்பு)

யாழ்தேவி புகையிரதம் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் காங்கேசன்துறை வரை தனது பயணத்தை விஸ்தரிக்கவுள்ளது.

தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் மகிந்த ராஜபக்ஷ அன்றைய தினம் உத்தியோக பூர்வமாக அதனை ஆரம்பித்து வைப்பதற்காக ஏற்பாடுகள் மிக விரைவாக இடம்பெற்று வருகின்றது.

எனவே அதற்குள் அனைத்து புனரமைப்பு வேலைகளையும் செய்து முடிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகள் தெற்கில் சூடுபிடித்திருந்த நில்லையில் வடக்கில் எந்தவித முன்னேற்பாடுகளும் அற்று

23ஆம் பக்கம் பார்க்க....

### பிரி.தூதுவராக ஜேம்ஸ் டோரிஸ்

(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராக ஜேம்ஸ் டோரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இலங்கையிலும், மாலைதீவிலும் செயற்படவுள்ளார்.

தற்போதைய பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கீன் தமது பதவிக்காலம் முடிவடைந்து செல்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவா நெருக்கடிகளை மைத்திரி மூலமே தீர்க்க முடியும்

### ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மூலம் மட்டுமே தீர்க்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி ஜெனிவாவில ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் எழுப்பப்பட்டுள்ள பொறுப்புக் கூறல் மற்றும் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும்.

மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாகத் தெரிவு

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதித் தேர்தல் நீதியாக இருக்காது

### கபே குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் நீதியான சுதந்திரமான ஒன்றல்ல என்ற முடிவிற்கு வரவேண்டி உள்ளதாக கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனவரி 8-ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாரியளவில் அரசியல் உரிமைகள் மீறப்படுவது குறித்து கவலை கொண்டுள்ள கபே அமைப்பு இதன் காரணமாக இந்த தேர்தல் நீதியான, சுதந்திரமான வொன்றல்ல என கருதுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை அம்பாந்தோட்டையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், வீதிநாடக கலைஞர்களும் தாக்கப்

24ஆம் பக்கம் பார்க்க....

## அரசின் ஊழலை நிறுத்துவோம்!

### மைத்திரி அழைப்பு



(கொழும்பு)

இந்த நாட்டில் பணக்காரர்களாக மாத்திரம் ஒரு அரசாங்கம் இருக்கின்றது என்றால் அது மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம். அவருடைய ஊழலை நிறுத்தி அந்த பணத்தை மிச்சப்படுத்தினால் சாதாரண மக்களுக்கு அன்றாட வாழ்க்கையை சிறப்பாக கொண்டு செல்ல

23ஆம் பக்கம் பார்க்க....

## தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு அரச ஊழியர்களுக்கான உத்தியோகபூர்வ தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும் நடத்தப்படவுள்ளன. அஞ்சல் மூல வாக்காளர்கள் தமது வாக்குகளை சுதந்திரமாகவும் இரகசியமாகவும் அடையாள மிடுவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார்.

வாக்காளர்களை அடையாளமிடுள்ள சின்னம் பிறர் அறியாத வகை

23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் ரிசாத் மைத்திரிக்கு ஆதரவு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகித்த அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் எதிரணிகளின் போது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்க அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

அமைச்சர் ரிசாத் பதியுதீன், அக்கட்சியின் சார்பில் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற அமீர் அலி சகிதம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இந்த சந்திப்பில் எதிரணிகளின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமது கட்சியை சேர்ந்த 7 மாகாண சபை உறுப்பினர்களும் 69 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தமது

24ஆம் பக்கம் பார்க்க....

## நேற்று இறுதிக்கட்ட பேச்சு இன்று கட்சியின் இறுதி முடிபு

## ஸ்ரீ.மு.காவின் நிலை திண்டாட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை பெரும்பாலும் எடுத்துள்ளது.

இந்தநிலையில் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இறுதிக கட்டமாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அலரி மாளிகைக்கு சென்று பேசியுள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில்இன்று இறுதி அறிவிப்பை வெளியிடவுள்ளது.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று அரசாங்கத்த தரப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக அரசாங்கத் தரப்பு பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று இறுதி முடிவை அறிவிக்கும் நிலையில் அந்தக்கட்சிக்குள் பிளவு ஏற்படும்

24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச சூழ்ச்சியில் மைத்திரி பாலசிறிசேன

### அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து அகற்றும் சர்வதேச சூழ்ச்சியில் மைத்திரிபால சிறிசேன தரப்பும் தொடர்புபட்டுள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப் பெரும குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படாமல் போனால் தான், ஐ.நாவின் தண்டனையில் இருந்து நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள மேற்குலக தூதரகங்களுடன் ஆலோசனை நடத்தாமல், எதிரணியால் இதுபோன்ற அறிவிப்பை வெளியிட முடியாது.

ஐ.நாவினால் முன்னெடுக்கப்படும் இலங்கைக்கு எதிரான விசாரணைகள் குறித்த தெளிவான விளக்கத்தை எதிரணியினர் அறிவிக்க வேண்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் மாநாடு

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அவர்களின் நீல செயலணியுடன் அங்கஜன் இராமநாதனின் இளைஞர் அணியும் இணைந்து கிராமங்கள் தோறும் சேவையினை மேற்கொள்ளவுள்ளது. எனவே இச்செயலணியுடன் இணைய விரும்பும் 18 வயது முதல் 35 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் தொகுதி வாரியாக நடைபெறுகின்ற அறிமுக நிகழ்வில் பங்குகொள்ளவும்.

இடம் : கிரீன் கிராஸ் ஹோட்டல்
GREEN GRASS HOTEL

| திகதி | தொகுதி | நேரம் |
|---|---|---|
| 23.12.2014 | யாழ்ப்பாணம் நல்லூர் | காலை 9.00 மணி |
| | கோப்பாய் மானிப்பாய் | மாலை 2.00 மணி |
| 24.12.2014 | வட்டுக்கோட்டை காங்கேசன்துறை | மாலை 2.00 மணி |
| 26.12.2014 | சாவகச்சேரி ஊர்காவற்துறை | காலை 9.00 மணி |
| | உடுப்பிட்டி பருத்தித்துறை | மாலை 2.00 மணி |

(8839)

## யாழ்.மாவட்ட பட்டதாரிகளிற்கான மாநாடும் வேலையற்ற பட்டதாரிகளிற்கான நிர்வாகத் தெரிவும்





கௌரவ மாகாணசபை உறுப்பினர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் பட்டதாரிகளின் பிரச்சினைகளிற்கு தீர்வு காணும் பொருட்டு, மாநாடும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

இடம் : கிறீன் கிராஸ் விடுதி (HOTEL)
காலம் : 24.12.2014
நேரம் : காலை 09.00 மணி

அனைத்து பட்டதாரிகள், வேலையற்ற பட்டதாரி மாணவர்களும் கலந்து கொள்ளவும்

## பகிரங்க கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தினால் 40'x20' அளவுள்ள அலுவலக பழைய கட்டிடத்தினை உடனடியாக இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி கட்டிடத்தினை 23.12.2014ஆம் திகதியிலிருந்து 30.12.2014ஆம் திகதிவரை நேரில் பார்வையிட்டு கேள்விப் பத்திர விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100.00 ஐ அலுவலக நாட்களில் பி.ப 3.00 மணிக்கு முன் செலுத்தி யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகை ரூபா.5,000.00 இணை வலயக்கல்வி அலுவலக கணக்காளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினைக் கேள்வியுடன் இணைத்து 02.01.2015ஆம் திகதி மு.ப 10.30க்கு முன் கேள்விப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் உடனடியாக திறக்கப்படும். கேள்விகள் சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

தகைமையுடைய கேள்விதாரர் உரிய தொகையினை அலுவலகத்தில் அன்றைய தினமே செலுத்தி 07 நாட்களினுள் குறித்த வேலையை அலுவலக செயற்பாட்டுக்கும் அலுவலர்களுக்கும் இடையூறின்றி முடிவுறுத்தி பொருட்களை பாதுகாப்பாக அகற்றுதல் வேண்டும்.

எஸ்.உதயகுமார்
தலைவர்
கேள்விச் சபை, வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C 9469)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

## திருமதி அன்னலட்சுமி சிவநேசன்

(சட்டத்தரணி சிவநேசன் அவர்களின் மனைவி)



மலர்வு : 24.06.1951 உதிர்வு : 26.11.2014

கடந்த 26.11.2014 புதன்கிழமை சிவபதமடைந்த குலவிளக்கு அமரர் திருமதி அன்னலட்சுமி சிவநேசன் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (23.12. 2014) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 25.12.2014 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களிற்கும் மற்றும் உறவினர்களிற்கும் அயலவர்களிற்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களிற்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

சிவநேசன் சட்டத்தரணி
குடும்பத்தினர்
0770317614, 0213219848

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8836)

# தமிழக மீனவர்கள் 28 பேர் விடுதலை

(கொழும்பு)

**தமிழகத்திலிருந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் பல்வேறு தடவைகளில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 89 மீனவர்களில் 28 பேர் நேற்று திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.**

சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து கிடைத்த பணிப்புரைக்கமைவாக 66 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இதன்படி முதற்கட்டமாக பருத்தித்துறை நீதிமன்றினால் 28 பேர் விடுதலை செய்யப்பட்டனர் எனவும் யாழ். இந்திய தூதரக பிரதித் தூதுவர் எஸ்.டி. மூர்த்தி உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் இந்தியத் துணைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டு தமிழகத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை, ஏனைய மீனவர்களும் விடுதலையாவர் என்று தெரியவருகிறது. (இ-5)

# அம்பாறையில் மழையால் போக்குவரத்து துண்டிப்பு

## படகுச் சேவை ஆரம்பம்

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து வரும் அடைமழை காரணமாக பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, பல கிராமங்களுக்கான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுளன.

குறிப்பாக நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்றக், கிராமங்களுக்குச் செல்வதற்கான சவளக்கடை கிட்டங்கித் தாம்போதியுடனான ஒரு கிலோமீற்றர் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் குறித்த கல்லோயா குடியேற்றக் கிராமங்களைச் சேர்ந்த பாமர மக்கள் கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை போன்ற பிரதேசங்களுடனான அன்றாடத் தேவைகள், வைத்தியவசதிகள் போன்ற முக்கிய தொடர்புகளைக் கொள்ள முடியாத நிலையேற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்பில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.கரன்,கல்முனை தமிழ்பிரிவு பிரதேச செயலாளர் கே.வைரவநாதன் ஆகியோர் குறித்த கிட்டங்கி பிரதேசத்திற்கு வருகை தந்து நேரடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் பயனாக கல்முனையிலுள்ள கடற்படையினரின் உதவியுடன் குறித்த சவளக்கடை கிட்டங்கி வீதியில் மக்கள் பயணிப்பதற்கு இன்று இயந்திர படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, சுற்றிவர வெள்ளத்தால் சூழுப்பட்டுள்ள கல்முனை தமிழப்பிரிவு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த துரவந்தியமேடு கிராமத்து மக்களுக்காகவும் இயந்திர படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுற்றிவர வெள்ளம் சூழ்ந்துள்ள துரவந்தியமேடு தமிழ் கிராமத்தில் 98 குடும்பங்கள் இருப்பதாகவும், அவசியப்படுமிடத்து சமைத்த உணவை இக்குடும்பங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யவிருப்பதாகவும் பிரதேச செயலாளர் கே.லவநாதன் தெரிவித்தார். (இ-5)

# தீர்வு தரும் வேட்பாளருக்கு தமிழர் மகா சபை ஆதரவு!

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தரக்கூடிய வேட்பாளருக்கே தாம் தமது ஆதரவை வழங்குவதாக அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மகாசபையின் விசேட பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. சபையின் தலைவர் சீனியர் குணநாயகம் தலைமையில் நடைபெற்று இக்கூட்டத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஆராயப்பட்டது. அக்கூட்டத்தில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பது அவசியமானது. தமிழ் மக்களுக்கே உரித்தான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வேட்பாளருக்கே தாம் தமது ஆதரவை வழங்க ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாக மேற்படி செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# கௌரவிப்பு விழா

2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.16 மணிக்கு யாழ். கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையில் சமரபாகு கலை இலக்கிய மன்ற தலைவர் சி.உதயகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.(இ-5)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 24.12.2014 புதன்கிழமை அன்று முற்பகல்10 மணிக்கு ஆரிய குளத்திடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (இ-5)

# சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜையுடன் விநாயகப் பெருமான் வீதிவலம் வந்து தொடர்ந்து பிள்ளையார் கதைப் படிப்பு நடைபெறும். (இ

# கௌரவிப்பு நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களமும் , இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்தும் கலாபூசணம் விருது பெற்ற கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ-5)


**SCIENCE HALL**

**கல்வி நிலையம்**

ஆரம்பம் 24.12.2014 காலை 9 மணி

சிவநகர், 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு (வைத்தியசாலை முன்பாக)

**உயர்தர (A/L) 2017 க்கான விஞ்ஞான/ கணிதப்பிரிவு, தொழில்நுட்ப பிரிவு, கலைப்பிரிவு மாணவர்களுக்கான அனைத்துப் பாடங்களும் ஆரம்பமாகின்றன.**

பொறியியற்தொழில்நுட்பவியல் Engineering Technology
S.K.கைறேகன் (Bsc Hons), V.அனுரன் (HND)

உயிர்முறைகள் தொழில்நுட்பவியல் Biosystem Technology
வஜிந் (Bsc Hons), K.யோதிப்பிரகாஸ் (B.sc)

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் Information Communication Technology
வி.றவீந்தர் (HND)

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் Science For Technolgy
K.வாணிமுகுந்தன் (B.sc,M.sc,Dip.in.Ed)
S.சுதன் (B.sc,M.sc,Dip.in.Ed)
S.K.கைறேகன் (B.sc, Hons)
T.வஜிந் (BSc,Hons)
வி.றவீந்தர் (HND IT)

உயிரியல் (Biological)
வ.வஜிந் (B.sc Hons),
K.யோதிப்பிரகாஸ் (B.sc)

பௌதிகவியல் (Physics)
T.தேவதாஸ் (B.sc med, SLES),
S.K.கைறேகன் (B.sc Hons)
T.அமிர் (Bsc)

இணைந்த கணிதம் (Combined Maths)
S.சுதன் (Bsc Msc),
S.மயூரன் (B.sc)

இரசாயனவியல் (Chemistry)
K.வாணிமுகுந்தன் (Bsc Msc)
S.மகேஸ்வரன் (பிரபல ஆசிரியர்)

விவசாய விஞ்ஞானம் (Agriculture)
N.சாந்தகிரி (SP.Trd.Agri)

(8833)

**நிர்வாகி-077 280 2296**


# இராசி பலன்

23.12.2014
(மார்கழி 08, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
துதியை பின்னிரவு 4.32 மணிவரை
பூராடம் முன்னிரவு 7.46 மணிவரை
இராகுகாலம் 3.25-4.55 மணிவரை
சுபநேரம் 10.55-12.25 மணிவரை

வளவன்

**மீனம்** வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதுகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**மேடம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**இடபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தேகநலனில் பாதிப்புக்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் வாய்ப்புண்டு, பயணத்தின் போது பொருட்களில் கவனம் அவசியம்.

**மிதுனம்** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், உறவினர்களின் வருகை யுண்டு.

**கும்பம்** உன்னதமான வாழ்க்கைக்கு அத்தி வாரம் அமைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் புதிய கூட்டாளிகளை சேர்க்கும் எண்ணம் மேலோங்கும்.

**கடகம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம் விரயங்கள் கூடும், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகள் தாமதமாகலாம்.

**சிம்மம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள்.


**விருச்சிகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும் நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்



## வாழ்க்கை வரலாறு...

07

## பாலச்சந்தருடன் முதல் சந்திப்பு

36 மாணவர்கள் பிலிம் இன்ஸ்டிடியூட் நடிப்பில் பயிற்சி பெறுவதற்காக ரஜினி உள்பட மொத்தம் 36 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் 17 பேர் அமிஞ்சிக்கரையில் இருந்த அருண் ஓட்டலில் ரூம் எடுத்து தங்கியிருந்தனர். ( அருண் ஓட்டல் இப்போது அங்கு பிரமாண்டமான வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது.)

இவர்கள் தினமும் பஸ் மூலம் பிலிம் இன்ஸ்டிடியூட்டுக்கு சென்று வருவது வழக்கம். சினிமாவில் எப்படி நடிக்க வேண்டும்? எப்படி வசனம் பேச வேண்டும் என்றெல்லாம் அங்கு பயிற்சி அளித்தார்கள். உலகப்புகழ் பெற்ற திரைப்படங்களை எல்லாம் அங்கு போட்டுக் காட்டுவார்கள். சார்லஸ் லாப்டன், கிளார்க் கேபிள், மார்லன் பிராண்டோ கிரிகிரி பெக் முதலான நடிகர்கள் நடித்த படங்களை எல்லாம் ரஜினி பார்த்தார். நடிப்பின் பல்வேறு பரிமானங்களை அறிந்துகொண்டார்.

சினிமா உலகைச் சேர்ந்த நடிகர்- நடிகைகள், டைரக்டர்கள் தொழில்நுட்பக் கலைஞர்கள் அடிக்கடி பிலிம் இன்ஸ்டிடியூட்டுக்கு வந்து உரை நிகழ்த்துவார்கள்.

பயிற்சி பெறுகிறவர்கள் கேட்கும் கேள்விக்ளுக்கு பதில் அளிப்பார்கள். சந்தேகங்களைத் தீர்த்து வைப்பார்கள்.

பயிற்சி பெறுகிறவர்களை திரைப்படக் கல்லூரி நிர்வாகிகள் சினிமா ஸ்டுடியோக்களுக்கு அழைத்துச்சென்று அங்கு நடைபெறும் படப்பிடிப்புக்களை பார்க்கச் செய்வார்கள்.

காலம் வெகு வேகமாக ஓடியது. பயிற்சி முடிய இன்னும் 3 மாதங்களே பாக்கி. அந்தக்கால கட்டம் பற்றி ரஜினி நினைவு கூறுகிறார். நாங்கள் 36 பேரும் பிலிம் சேம்பர் அலுவலகம், சபையார், புளூ டைமண்ட தியேட்டர்கள், அமெரிக்க துதரகம், சோவியத் கல்சுரல் சென்டர் டிரைவர் இன் ஓட்டல்... இப்படி சுற்றிச் சுற்றி வந்தாலும், எங்களுக்கு ஒரு தனி உலகம் இருந்தது. அதுதான் கனவு உலகம்!

சுவாரஸ்யமான வாழ்க்கை வித்தியாசமான வாழ்க்கை பொறுப்பு இருந்தும் பொறுப்பில்லாத மாதிரி போலி வாழ்க்கை. கனவு வாழ்க்கை. ஓ.... அந்தக் கனவில்தான் எத்தனை சுகம்.


காலை 10 மணிக்குக் கூடுகிறோம். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு ஹலோ... ஹாய் என்கிறோம். நகரில் ஓடும் சினிமா படங்களை எல்லாம் பார்க்கிறோம். வீட்டிலிருந்து வரும் பணத்தை ஜாலியாக செலவு பண்ணுகிறோம்.

காலம் போவது தெரியவில்லை. இதோ, படிப்பு முடியப் போகிறது!

வெகு துாரத்தில் ஒரு சொர்க்கம் தெரிகிறது. அந்த சொர்க்கம் ஏது? அது தான் சினிமா உலகம். அங்கே புகுந்துவிட வேண்டும்.

இன்னும் மூன்றே மாதம். படிப்பு முடிந்துவிடும். அதன்பிறகு என்ன செய்வது? எப்படி சினிமா உலகில் சான்ஸ் பிடிப்பது? எல்லோருடைய முகத்திலும் எதிர்காலம் பற்றிய கவலை தெரிகிறது.

வீட்டில் சொன்னதைக் கேட்காமல் இன்ஸ்டிடியூட்டில் சேர்ந்தோம். பயிற்சி பெற்றோம். ஆனால் வேலைக்கு என்ன உத்தரவாதம்? மனம் குழப்புகிறது...



கே.பாலசந்தருடன் ரஜினி, கமல்

இப்படியெல்லாம் ரஜினி எண்ணினாலும் அவருடைய உள் மனதில் தன்னம்பிக்கை சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வாழ்க்கையில் வெற்றி பெறுவோம் என்று அவருடைய இதயம் இடைவிடாமல் கூறிக்கொண்டிருந்தது.

சென்னை நடிப்பு பயிற்சி கல்லூரியில் ரஜினியின் படிப்பு முடிவடைவதற்கு சில நாட்கள் இருந்த வேளையில் அங்கு டைரக்டர் கே.பாலசந்தர் வந்து மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்கப் போகிறார் என்று அறிவித்தார்கள்.

அதைக் கேட்டதும் ரஜினிக்கு உற்சாகம் தாங்கவில்லை. பாலச்சந்தரின் மேஜர் சந்திரகாந்த் படத்தை பார்த்தது முதல், அவருடைய பரம ரசிகராகியிருந்தார். பாலசந்தர் படங்களை ஒன்று விடாமல் பார்க்கலானார்.

பாலசந்தரைப் பார்க்கப் போகிறோம் என்று அறிந்த போது தனக்கு ஏற்பட்ட உணர்ச்சி பற்றி ரஜினி கூறிகிறார்:..........

(தொடரும்)

# அதிசய உலகம்

**உலகில் மிக நீளமான மீசை கொண்ட நபர்...!**

இந்தியாவைச் சேர்ந்த ராம் சிங் சவுகான் என்பவர் உலகில் மிக நீளமான மீசை கொண்ட மனிதராக விளங்குகிறார்.

அஹமதாபாத் நகரைச் சேர்ந்த 61 வயதான ராம் சிங் சவுகானின்



மீசை 18 அடி நீளமானதாகும்.

உலகிலேயே மிக நீளமான மீசை இதுவென கின்னஸ் சாதனை நூல் வெளியீட்டாளர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமைப்போம் சுவைப்போம்

## பச்சைப் பட்டாணி கட்லெட்

**தேவையான பொருட்கள்:**

பச்சை பட்டாணி - 3/4 கப் (வேக வைத்து மசித்தது)
அரிசி மாவு - 1/2 கப்
கடலை மா - 1/2 கப்
மஞ்சள் தூள் - 1/4 டீஸ்பூன்
பச்சை மிளகாய் - 2 (பொடியாக நறுக்கியது)
பன்னீர் - 1/4 கப் (துருவியது)
தக்காளி - 1/2 கப் (பொடியாக நறுக்கியது)
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு



**செய்முறை:**

முதலில் ஒரு பாத்திரத்தில் வேக வைத்து மசித்து வைத் துள்ள பச்சைபட்டாணியை போட்டு, அத்துடன் அரிசி மாவு, கடலை மாவு, மஞ்சள் தூள், தக்காளி, பச்சை மிளகாய், பன்னீர், உப்பு, மற்றும் தண்ணீர் ஊற்றி, சற்று கெட்டியாக கலந்துகொள்ள வேண்டும். பின் அந்த கலவையை கட்லெட் போல், தட்டையாகவும் சற்று தடிமனாகவும் தட்டி ஒரு தட்டில் வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் ஓரளவு எண்ணெய் விட்டு, காய்ந்ததும், அதில் தட்டி வைத்துள்ள கட்லெட்டை, முன்னும், பின்னும் பொன்னிறமாக வேக வைத்து எடுக்க வேண்டும்.

உ
சிவமயம்



காரைநகர் மணிவாசகர் சபை

## பவளவிழா மலர் வெளியீட்டு விழா 2014

வேண்டத் தக்க தறிவோய் நீவேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய் யானுமதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.

-மணிவாசகர்-

**இடம்**

யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய
(காரைநகர் இந்துக் கல்லூரி)
நடராசா மண்டபம்

**காலம்**

25.12.2014 வியாழக்கிழமை
காலை 09.00 மணி

**தலைவர்**

செஞ்சொற்செல்வர்
**கலாநிதி ஆறு.திருமுருகன்**
(தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**நிகழ்ச்சிகள்**

திருவாசகத் திருமுறை ஓதல்: திரு.மு.சுந்தரலிங்கம் (ஆதீன கர்த்தா)

ஆசியுரை:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர்)
சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள் (ஈழத்துச் சிதம்பர பிரதமகுரு)

வரவேற்புரை:- திரு.க.தில்லையம்பலம் ஓய்வுநிலை அதிபர் (சபை உபதலைவர்)

தலைமையுரை : தலைவர்

முதற் பிரதி பெறுபவர்: (ஈழத்துச் சிதம்பரம் ஆதீன கர்த்தாக்கள்)

சிறப்புப்பிரதி வழங்கல்

மலர் வெளியீட்டுரை: பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா

மலர் ஆய்வுரை: செந்தமிழ்ச் சொல்லருவி திரு.ச.லலீசன் (உப அதிபர், ஆசிரியர் பயிற்சி கலாசாலை,கோப்பாய்)

சிறப்புரை: பேராசிரியர் வே.தர்மரத்தினம்

பிரதமவுரை: பேராசிரியர் இ.குமாரவடிவேல்

நிறைவுரை: பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை (சபைத் தலைவர்)

இம்மலரில் தமிழ் நாட்டு, ஈழ நாட்டு அறிஞர் பெருமக்களால் எழுதப்பட்ட முப்பத்திரண்டுக்கு மேற்பட்ட கட்டுரைகள் உள்ளடங்குகின்றன. ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு வகை. தனித்தனிச் சுவை,சிந்திக்க வைக்கும் கட்டுரைகள். 268 பக்கங்களைக் கொண்டது.வெளியீட்டு விழாவில் பங்குபற்றி பிரதியைப் பெற்றுச் சிறப்புச் செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை:-கஜமுகன் ஹாட்வெயார்
147,149
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

காரைநகர் மணிவாசகர் சபை
10.12.2014


# ஆண்டு நிறைவு தின நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

வதிரி கரவெட்டி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 29 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபமும் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கழகத் தலைவர் வ.சிவச்சந்திரதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேசசெயலர் எஸ்.சிவசிறி, பருத்தித்துறை பிரதேச செயலர் ரி.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 270 | 180 | 130 | 240 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 350-400 | 420 | 500 | 400 |
| தக்காளி | 200 | 200 | 250 | 200 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 50 | 60 |
| கோவா | 120 | 140 | 130 | 160 |
| கரட் | — | 200 | 180 | 200 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 |
| புடோல் | 60 | 150 | 120 | 120 |
| வாழைக்காய் | 60-70 | 100 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 110 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | — | 150 | 320 | 240 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 150 | 100 |
| கருணைக் கிழங்கு | 40-50 | 80 | 60 | 60 |
| பயற்றங்காய் | 220 | 280 | 250 | 240 |
| லீக்ஸ் | — | 300 | 220 | 400 |
| பீற்றூட் | — | 200 | 150 | 240 |
| கறிமிளகாய் | — | 350 | 200 | 280 |
| முருங்கைக்காய் | — | 580 | — | — |
| போஞ்சி | 180 | 200 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 160 | 100 | — |
| கீரை - 1 பிடி | 15-25 | 60 | 45 | 50 |
| தேசிக்காய் | 50-60 | 140 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | — | 180 | 130 | 150 |


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 24 செவ் 12 இல்
உயரம்: 5’9"
தகைமை/தொழில் A/L/ முகாமையாளர்
தொ.இ: B/001

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 43 1/4 செவ் 8 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: MA/ஆசிரியர்
தொ.இ: B/006

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பர்: 50 3/4 செவ் 8 இல்
உயரம்: 5’8"
தகைமை/தொழில் MSC/ தனியர் தொழில் (லண்டன் NOT PR)
தொ.இ: B/015

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 125 செவ் 7 இல்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்: O/L (லண்டன் PR)
தொ.இ: B/023

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 58 செவ் 8 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: BSC, MSC/ தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/3294

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 13 3/4
உயரம்: 5’
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3299

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 43 செவ் 1 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: HNDA/ அர்ச தொழில்
தொ.இ: G/004

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 44 1/4 செவ் இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: G/010

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதிகள் திருத்தப்படாமையால் பொதுமக்கள் அசௌகரியம்!

வட்டுக்கோட்டை பேய்ச்சியம்பாள் நாவலடி வீதி, கார்த்திகேய வித்தியாலயம் மற்றும் வட்டு தெற்கு ஜே/165 கிராம உத்தியோகத்தர் காரியாலய வீதி என்பன நீண்டகாலமாக திருத்தப்படாத நிலையில் இருப்பதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வீதிகள் குன்றும் குழியுமாக இருப்பதனால் பொதுமக்கள் விபத்துக்களில் சிக்க வேண்டிய நிலைமைகள்கூட ஏற்பட்டு வருகின்றது.


மேலும் பாடசாலை செல்லும் மாணவர்கள் சேறும் சகதியும் நிறைந்த நீரில் நனைந்து செல்லவேண்டிய நிலைமைகள்கூட இடம் பெற்றிருக்கின்றன.

இவ்வாறான நிலைமைகளில் வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு மகஜர்கள் கையளித்தும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுத்து இந்த அவல நிலையைப் போக்க ஆவன செய்யவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ




# சிறப்புற இடம்பெற்ற பாரதி விழா


பேராசிரியர் க.அருணாசலத்திற்கு பேராசிரியர் க.கந்தசாமி விருதைக் கையளிக்கின்றார்






(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி இலக்கிய அணியினர் முன்னெடுத்த பாரதி விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொழிலதிபர் அ.ஜெயச்சந்திரன் தம்பதியர் மங்கல விளக்கேற்றினர். தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் தொடக்கவுரை ஆற்றினார். விழாவை சிறப்பிக்கும் வகையில் சான்றோர் கௌரவிப்பு இடம்பெற்றது. இதன்போது பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவரும் தென்மராட்சி மீசாலையைச் சேர்ந்தவருமாகிய பேராசிரியர் க.அருணாசலம் கௌரவிக்கப்பட்டார். பாரதியாரைப் பற்றிய கவிதைகள் அடங்கிய நெருப்புக்குஞ்சு என்ற நூல் வெளியிடப்பட்டது.

நிகழ்வின்போது முப்பெரும் பாடல்களில் முகிழ்க்கும் பாரதி என்ற பொருளில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் கருத்தரங்கு இடம்பெற்றது. குயிற் பாட்டில் பாரதி என்ற பொருளில் இலக்கிய அணியின் அமைப்பாளர் ஆசிரியர் அ.வாசுதேவாவும் பாஞ்சாலி சபதத்தில் பாரதி என்ற பொருளில் விரிவுரையாளர் ச.லலீசனும், கண்ணன் பாட்டில் பாரதி என்ற பொருளில் பேராசிரியர் தி.வேல்நம்பியும் கருத்துரைகளை வழங்கினர். தொடர்ந்து பாரதி பாடல்களில் பெரிதும் விஞ்சி நிற்பது எது என்ற பொருளில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமண்டபம் இடம்பெற்றது. தேசபக்தியே என ஆசிரியர்களான த.நாகேஸ்வரன், எஸ்.சுதன், அபிவிருத்தி உதவியாளர் ந.ஜங்கரன் ஆகியோரும் தெய்வபக்தியே என வலய கல்வி அலுவலக தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் க.ஈஸ்வரன், ஆசிரியர்களான வே.உதயகுமார், சோ.கோகுலன் ஆகியோரும் வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆதரவளிப்பது குறித்து ஆனந்தசங்கரி விளக்கம்


பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கம் மாறியபோதும் எந்த அரசும் தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காத நிலையில் இன்று பல்வேறு கொள்கைகளோடு செயற்பட்ட கட்சிகள் ஒன்றிணைந்து எல்லோரையும் பாதிக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளில் தீர்விற்கு ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்துவரும் வேளையில் எமக்கு சாதகமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் அக்கட்சிகள் எடுக்கும் முயற்சிக்கு ஆதரவளிக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பிரஜைகளுக்கும் இனப்பிரச்சினை உட்பட தீர்வு காணமுடியும் என்ற கௌரவமிக்க சில தலைவர்களின் கருத்தை நம்பிக்கையுடன் வரவேற்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு சிறுபான்மை இன மக்களுக்கும் உண்டு.

இவ்வரசியல் கட்சிகளின் தலைவர்கள் நியாயமான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளமையால் இக கட்டத்தில் அவர்கள் முயற்சிக்கு குநதகம் விளைவிக்கக்கூடிய வகையில் எம்மைச் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை உட்புகுத்தாது தவிர்க்க வேண்டியது சிறுபான்மையின மக்களாகிய எமது கடமையாகும்.

இன்றைய சூழ்நிலையை அனுசரித்து வேறு கட்சியோ, கட்சி உறுப்பினர்களோ எங்களோடு இணைந்து செயற்பட விரும்பின் நாங்கள் இணைத்துக்கொள்ளத் தயாராகவுள்ளோம்.

மொத்தத்தில் இவ்வழியில் ஜனாதிபதி வேட்பாளர் கொடுத்துள்ள உறுதிமொழியிலும் தன்நலன் கருதாது இப்பணியில் ஈடுபட்டுள்ள அரசியல் சார்பற்ற தலைவர்களின் உறுதி மொழியிலும் பல்வேறு கொள்கைகளில் இதுவரை ஈடுபட்டிருந்த 36 கட்சித்தலைவர்களின் உறுதி மொழியிலும் நாம் நம்பிக்கை வைத்து மக்களின் இதுவரை தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு சகல இன, மத மக்களும் ஒற்றுமையாக புதிய ஜனநாயக அமைப்பில் வாழ வைகக எடுக்கப்படும் நடவடிக்கையாகிய ஜனாதிபதித் தேர்தலில் சகல மக்களும் பொது வேட்பாளராகிய மைததிரிபால சிறிசேனவுக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்டக்கிளை ஏகமனதாக தீர்மானிக்கின்றது என ஆனந்த சங்கரி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# செயலமர்வு நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தினால் நேற்றும் இன்றும் (22,23) யாழ்.விக்ரோறியாக் கல்லூரியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கணிதபாட வதிவிட செயலமர்வு குறித்த திகதிகளில் நடைபெற மாட்டாது என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)

# யாழ்.வலிகாமம் வடக்குப்பகுதி மக்களை மீள்குடியேற்றுவதில் அமைச்சர் அக்கறை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பகுதி மக்களை மீளவும் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியான கலந்துரையாடல்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வருகின்றார் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதிக்கான பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காங்கேசன்துறை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாக தீர்வு காணப்படாத் பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறாக இவர்களது பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வு காணப்பட வேண்டியதாகவேயுள்ளது.

குறிப்பாக, அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளவும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டுமென்பது தொடர்பிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி வருகின்றார்.

அதனூடாக அப்பகுதி மக்களுக்கு நிரந்தரமானதொரு தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷக்கு வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

அவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே இப்பகுதி மக்களது மீள்குடியேற்றம் மட்டுமன்றி ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பிலான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான அங்கஜன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5)

# சனாதனி புதிய ஆன்மீக சஞ்சிகை

(யாழ்ப்பாணம்)

சனாதனி என்ற பெயரில் ஆன்மீகச் சஞ்சிகை ஒன்று நீர்வேலியில் இருந்து வெளிவரத் தொடங்கியிருக்கிறது.

நீர்வை தி.மயூரகிரிசர்மாவை ஆசிரியராகக் கொண்டு சனாதன சேவா பீடத்தினரால் இது வெளியீடு செய்யப்படுகின்றது.

காலாண்டிதழாக மலரத் தொடங்கியிருக்கும் இச்சஞ்சிகையின் முதலாவது இதழ் ஐயப்பன் வழிபாடு குறித்த சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

இதன் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நீர்வேலி செல்லக்கதிர்காம தேவஸ்தானததில இடம்பெற்றது.

நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் நேற்று திறப்பு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் பருவமழை தொடர்ச்சியாக பெய்து வருகின்றது. இதன் காரணமாக இரணைமடு பெருங்குளத்தின் நீர்மட்டம் 31 அடியை கடக்கின்ற நிலையை எட்டியதால் குளத்தின் அணைகளின் நிலை மற்றும் விளைச்சல் வயல்களின் நன்மையை கருத்திற்கொண்டும் வட மாகாண விவசாய நீர்ப்பாசன அமைச்சின் மேற்பார்வையின் கீழ், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு நேற்று காலை10 வான் கதவுகள் 8 அங் குல உயரத்திற்கு திறந்து விடப்பட்டன.**

## பொதுமக்களை அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் எச்சரிக்கை



நேற்று முன்தினம் பிற்பகல் 30 அடி 5 அங்குலத்திற்கு குளத்தின் நீர்மட்டம் இருந்தது. இந்நிலையில் நேற்றைய தினம் பெய்த கனமழையினை அடுத்து குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்தது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக குளத்தின் நீர் கொள்ளளவு 31 அடி 5 அங்குலமாக இருந்த போது 7 வான்கதவுகள் 6 அங்குல உயரத்திற்கு திறந்து விடப்பட்டன.

எனினும் குளத்திற்கான நீர்வரத்து 31 அடி 7 அங்குலத்தை எட்டிய நிலையில் நீர்வரத்தின் வேகத்தைக் கருத்தில் கொண்டு மேலதிக நடவடிக்கையாக 10 வான்கதவுகள் 8 அடி உயரத்திற்குதிறக்கப்பட்டன.

இதனால் குளத்தின் கீழுள்ள பன்னங்கண்டி, முரசுமோட்டை, கண்டாவளை, ஊரியான் வெலிக்கண்டல் ஆகிய கிராமங்களிலுள்ள பொது மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் கேட்டுள்ளனர்.

அத்துடன் கால்நடை வளர்ப்போர் வெள்ள நீரின் வேகத்தில் அவை இழுத்து செல்லப்படும் நிலை காணப்படுவதால் அவற்றினை பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்துமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் தாழ்நிலை பிரதேசங்களில் வசிக்கின்ற பொது மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளைபன்னங்கண்டி, தென்னம்பிள்ளைபாம், வெட்டுக்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் இடம் பெயர்ந்து கிளி/பன்னங்கண்டி வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் செயற்பட்டு வருகின்றது.

மழைநீரின் வரத்து அதிகரிக்க கிளிநொச்சி குளமும் 2 அடி உயரத்திற்கு வான் பாயத் தொடங்கியுள்ளது.

அத்துடன் கிளிநொச்சி கல்மடுக்குளம் 22 அடி நீர் கொள்ளளவைக் கொண்டதாகும். நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் ஒரு அடிக்கு மேலாக நீர்கலிங்கு பாய ஆரம்பித்துள்ளது.

இதனால் தர்மபுரம் பகுதியில் அமைந்துள்ள பரந்தன்-முல்லைத்தீவு பிரதான வீதியில் உள்ள நெத்தியாற்றுப் பாலம் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் துணைப்பாலத்தின் ஊடான போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் அவ் வீதியூடாக நீர் குறுக்கறுத்து பாய்வதால் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி-சாந்தபுரம் கிராமத்திற்கான பிரதான வீதி நீரில் மூழ்கியுள்ளது.

இதனால் அவ்வழியூடாக போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் தமக்கான பயணத்தை இடை நிறுத்தியுள்ளனர்.

இவ்வீதியூடாக செல்வபுரம், சாந்தபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் பயணிப்பது வழமையானதாகும்.

கிளிநொச்சி நகரிலிருந்து முழுங்காவில் செல்லும் பாதையில் நான்கு இடங்களில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதனால் இவ்வீதியினூடான போக்குவரத்து மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

கிளிநொச்சி சேவியர் கடைச் சந்தி, மருதடி, யூனியன் குளம், கோணாவில், ஆனைவிழுந்தான் போன்ற இடங்களில் வீதியைக்குறுக்கறுத்துவெள்ளம் பாய்வதனால் இவ்வீதியூடாக மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. மேலும் அம்பாள்குளம், சாந்தன் குளம் ஆகிய குளங்களின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பெரியகுளமாக காணப்படும் பாவற்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்ததை தொடர்ந்து இரு வான் கதவுகள் திறக்கப்பட்டன.

குளத்தின் நீர் கொள்ளளவு அதிகரித்ததை தொடர்ந்து வவுனியா மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தினால் இரு வான் கதவுகள் ஒரு அடி வரை திறக்கப்பட்டன.

இதேவேளை வான்கதவுகள் திறக்கப்பட்டமையினாலும் மல்வத்து ஓயா நீர்மட்டத்தின் அளவுஅதிகரித்துள்ளமையினாலும் மீடியா பார்ம் பாவற்குளம், யுனிட்ஒன்று, கந்தசாமி நகர், பெரியகட்டு, கன்னாட்டி மெனிக்பாம் மக்களை அவதானமாக இருக்குமாறு வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்நிலையில் வெள்ள அபாயம் ஏற்பட்டால் வரக்கூடிய இடர்பாடுகளை சமாளிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

நேற்றையதினம் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் பொது மக்களை அவதானத்துடன் இருக்கும்படி மீண்டும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

கடந்த 2012 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் திறக்கப்பட்ட இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள், அதன் பின்னர் போதியளவு மழை வீழ்ச்சி இல்லாத காரணத்தால் திறக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(2-277-285-284-271-250)



கிளிநொச்சி



பாவற்குளம்

சாந்தபுரம்



## தொடர்ச்சியான கனமழை; பொதுமக்கள் இடப்பெயர்வு

(குருமன்காடு)

வவுனியாவில் தொடர் மழை காரணமாக 510 குடும்பங்களைச் சேர்ந்த 1943 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக 510 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 943 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 2 வீடுகள் முழுமையாகவும் 29 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பாவற்குளம் படிவம் ஒன்றில் மழை காரணமாக 10 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் இடம்பெயர்ந்த நிலையில் பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மல்வத்து ஓயாவின் நீர்மட்டம் உயர்ந்தமை காரணமாக செட்டிகுளம், மீடியா பாம் கிராமத்தைச் சேர்ந்த 16 குடும்பங்களை சேர்ந்த 58 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் மக்களின் பிரதான போக்குவரத்து பாதைகளும் பாதிப்படைந்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

(2-250)

## இருவர் கஞ்சாவுடன் கைது

(குருமன்காடு)

வவுனியா பேருந்து நிலையத்தில் இருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பேருந்து ஒன்றில் வந்து இறங்கிய இருவர் கொழும்பு பேருந்தில் ஏறுவதற்காக காத்திருந்த போது வவுனியா பொலிஸார் அவர்களின் பொதிகளை சோதித்தனர். அப்போது 2 கிலோ 125 கிராம் பெறுமதியான கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்பின்னர் இருவரும் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வவுனியா நீதிமன் [illegible] வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

(2-250)

## தமிழ்க்கூட்டமைப்பின் முடிவை புளொட் ஆதரிக்கும்-சித்தார்த்தன்





ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்தில் தலைமை வகித்த சிறி என்பவரே மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியிருக்கின்றாரே தவிர புளொட் எப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவையே ஆதரிக்கும் என வடமாகாண சபை உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான சித்தார்த்தன் தெரிவித்தார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த புளொட் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதாக வவுனியாவில் வைத்து நேற்று முன்தினம் அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவரிடம் புளொட்டின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சிறி என்பவர் 1990 களில் எம்மிடம் வந்து தனக்கு பாதுகாப்பு தேவை என தெரிவித்து சிறிது காலம் எம்முடன் இருந்தார். அதன் பின்னர் அவர் பாரிசிற்கு சென்றார்.

தற்போது அவரே மீண்டும் இலங்கைக்கு வந்து அரசசார்பற்ற நிறுவனங்களை நடத்தி பல பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருந்தார்.

அவரே தற்போது புளொட்டில் இருந்து பிரிந்து நிற்கின்றோம் என தெரிவித்து பசிலை கண்டு கதைத்துள்ளார்.

அதற்கு சார்பாக "நோட்டிஸ் வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார். அத்துடன் அவருடன் எத்தனைபேர் உள்ளனர் என் பதும் எனக்கு தெரியவில்லை

ஆனால்புளொட்டை பொறுத்த வரையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ன முடிவெடுக்கின்றதோ அதுவே முடிவாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

(2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் நாடு அபிவிருத்தி அடையவில்லை- ரணதுங்க

நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் நாடு அபிவிருத்தி அடையவில்லை என ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நிட்டம்புவ கலகெடிஹென குருந்துவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டு கால போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதாகும். போர் நிறைவின் பின்னர் நாட்டில் பாரிய அபிவிருத்தி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவ்வாறான அபிவிருத்தி எதுவும் இடம்பெறவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களை ஏமாற்றி தனது பதவிக் காலத்தை நீடித்துக்கொள்ளவே முயற்சிக்கின்றார். அரசாங்கத்தினால் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் முற்றுமுழுதாக இலஞ்ச வரவு செலவுத் திட்டமாகும்.

தேர்தல் காலத்திலேயே எரிபொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் குறைவடையும். பாதைகள் சீரமைக்கப்படுவது நல்ல விடயம் எனினும் பாதைகள் அமைக்கும் பணிகளில் பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.

போர் நிறைவடைந்துள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சிற்கான செலவுகள் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் மாற்றத்தைக் கொண்டு வர ஆட்சி மாற்றமொன்று அவசியம் என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ-5)

# வெள்ளிக்கிரகத்தில் மனிதர்களை குடியமர்த்த நாசா விசேட திட்டம்




விண்கலன்களை அனுப்பி ஆய்வு செய்து வெள்ளிக்கிரகத்தில் மனிதர்களை குடியமர்த்த 'நாசா' திட்டமிட்டுள்ளது.

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காவின் 'நாசா' மையம் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. தற்போது செவ்வாய் கிரகத்துக்கு விண்கலன்களை அனுப்பி ஆய்வு மேற்கொண்டுள்ளது.

அங்கு 2024ஆம் ஆண்டுக்குள் மனிதர்களை நிரந்தரமாக குடியமர்த்த ஆய்வு செய்து வருகிறது. விண்வெளிக்கு 'ஹெப்லர்' விண்கலத்தை அனுப்பி புதிய கிரகங்கள் மற்றும் நட்சத்திர கூட்டங்களை கண்டுபிடித்து வருகிறது.

இந்த நிலையில் செவ்வாய் கிரகத்துக்கு மனிதனை அனுப்புவதற்கு முன்பு வெள்ளி கிரகத்தில் ஆய்வு மேற்கொள்ள 'நாசா' திட்டமிட்டுள்ளது. அங்கு மனிதர்களை குடியமர்த்தவும் முடிவு செய்துள்ளது.

ஏனெனில் வெள்ளி கிரகத்தின் மேற்பரப்பு பூமியை போன்று உள்ளது. அதன் 50 கி.மீற்றர் தூரத்துக்கு பூமியில் இருப்பது போன்ற சூழ்நிலை நிலவுகிறது. அதே நேரத்தில் புவிஈர்ப்பு சக்தி மட்டும் பூமியைவிட சற்று குறைவாக உள்ளது.

மேலும் சூரியன் தனது சூரிய சக்தி பூமியை விட 40 சதவீதம் அதிகமாக உள்ளது. இதற்கான ஆய்வை விர்ஜீனியாவில் உள்ள விண்வெளி ஆய்வு மைய நிபுணர்கள் டேல் ஆர்னே, கிறிஸ் ஜோன்ஸ் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

தொடக்கத்தில் 'ரோபோ'வை அனுப்ப திட்டமிட்டுள்ளனர். அந்த ஆய்வுக்கு பின்னர் மனிதர்களை அனுப்பி வெள்ளி கிரக சுற்றுப் பாதையில் 30 நாட்கள் தங்கி யிருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் அங்கு 2 பேர் குழு ஒருவருடம் தங்கியிருந்து மனிதர்கள் நிரந்தரமாக தங்கும் வகையில் ஏற்பாடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக சூரிய சக்தியில் இயங்கும் விண்கலன்களை அனுப்பி வெள்ளிக்கிரக சுற்றுச்சூழலை ஆய்வு செய்யவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ-5)

# ஹரின் பெர்னாண்டோ மகிந்தவுக்கு ஆதரவாம்

## அரசதரப்பு உறுப்பினர் கூறுகிறார்

ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னாண்டோ அடுத்த வாரம் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து அரசாங்கத்தில் இணையவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

இந்த தகவலை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசாங்கத்தில் இணைந்து கொண்ட மாகாண சபை உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் மொனராகலை பிரதேச சபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவது குறித்து ஹரின் பெர்னாணடோவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அது வெற்றியளித்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள அரசியல் பயணத்தின்படி மகிந்த ராஜபக்ஷவின் கரங்களை பலப்படுத்துவதே செய்ய வேண்டியது எனவும் பின்னர்தான் அரசாங்கத்தில் இணைந்து கொள்வதாக ஹரின் பெர்னாண்டோ தன்னிடம் கூறியதாகவும் குட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் முதலில் தன்னை அரசாங்கத்தில் இணையுமாறு ஹரின் கூறியதாகவும் குட்டியாராச்சி தெரிவித்தார். (இ-5)

# சிறுநீரகக் கற்கள் எப்படி உருவாகின்றன

சிறுநீரகத்தில் உள்ள அதிகப்படியான தாதுஉப்புக்கள் மற்றும் அமில உப்புக்கள் கற்களை உருவாக்குகின்றன. நோய்த்தொற்று, நீர்ச்சத்துக் குறைவு, தவறான உணவுப் பழக்கம் உள்ளிட்ட பல காரணங்களால் சிறுநீரகக் கற்கள் ஏற்படுகின்றன. சிறுநீரகம், சிறுநீரகத்தில் இருந்து சிறுநீர்ப்பைக்குச் செல்லும் குழாய், சிறுநீர்ப்பை என சிறுநீரக மண்டலத்தில் எந்தப் பகுதியிலும் கற்கள் ஏற்படலாம்.

**அறிகுறிகள்**


கல் உருவாகும்போதே அறிகுறிகள் வெளிப்படுவது இல்லை. பெரும்பாலும் கற்கள் பெரிதாகி, சிறுநீரகத்தில் இருந்து சிறுநீர் செல்லும் குழாய்க்கு கல் நகரும போது அல்லது அடைப்பை ஏற்படுத்தும்போது அறிகுறிகளை வெளிப்படுத்துகிறது.

- முதுகில், விலா எலும்புக்குக் கீழ் பகுதியில் கடுமையான வலி
- வலி அடிவயிற்றுக்குப் பரவுதல் மற்றும் அதிகரித்தல்
- சிறுநீர் கழிக்கும்போது வலி, நீர்க்கடுப்பு
- இளஞ்சிவப்பு, கருஞ்சிவப்பு, மாநிறத்தில் சிறுநீர் வெளியேறுதல்
- குமட்டல் மற்றும் வாந்தி
- சிறுநீர் கழிப்பதில் அவசரம்
- வழக்கத்தைவிட அடிக்கடி சிறுநீர் கழித்தல்
- நோய்த் தொற்றால் ஏற்படும் காய்ச்சல்

**கல் ஏன் ஏற்படுகிறது?**

சிறுநீரகக் கற்கள் இதனால் தான் ஏற்படுகிறது என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை என்றாலும், பல்வேறு காரணிகள் சிறுநீரகக் கற்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கின்றன.

கல்சியம், ஆக்சலேட் மற்றும்



யூரிக் அமிலம் போன்ற கல்படிமங்களை ஏற்படுத்தும் தாது உபபுக்கள் சிறுநீரில் அதிகமாக இருந்தால், கற்கள் ஏற்படும்.

**கல்சியம் கற்கள்:** பெரும்பான்மையான சிறுநீரகக் கற்கள் கலசியம் வகையைச் சேர்ந்தவை. கல்சியம் ஆக்சலேட்டாக இவை இருக்கின்றன. ஆக்சலேட் என்பது காய்கறிகள், பழங்கள், விதை வகைகள், சொக்லேட்களில் காணப்படுகிறது. தவிர, கல்லீரலும் ஆக்சலேட்டை உற்பத்தி செய்கிறது.

கல்சியத்துடன் இது வினை புரிந்து கல்சியம் ஆக்சலேட் கல்லாக சிறுநீரகத்தில் படிகிறது. சில நேரங்களில் கல்சியம் பொஸ்பேட் கல்லும் உருவாகலாம்.

**ஸ்ட்ரூவைட் கற்கள்:** சிறுநீரகப் பாதையில் ஏற்படும் நோய்த்தொற்று காரணமாக ஏற்படுகிறது. இந்த கல் மிக விரைவாகத் தோன்றி, மிக வேகமாகப் பெரிதாகும்.

**சிஸ்டின் கற்கள்:** சிலருக்கு மரபியல்ரீதியாக, சிறுநீரகம் சில வகையான அமினோ அமிலங்களை வெளியேற்றும் பாதிப்பு இருக்கும். இதனால் சிஸ்டின் வகை கல் உருவாகிறது.

**யூரிக் அமில கற்கள்:** அதிக அளவில் நீர் அருந்தாதவர்களுக்கும், நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகளை எடுத்துக்கொள்ளாதவர்களுக்கும், குறைந்த அளவில் நீர் வெளியேறுபவர்களுக்கும், அதிகப் புரதச்சத்து உள்ள உணவுகளை உட்கொள்பவர்களுக்கும், கவுட் என்ற நோய் உள்ளவர்களுக்கும் ஏற்படுகிறது. சில மரபியல் காரணிகளும் யூரிக் அமிலக் கற்கள் உருவாகும் வாய்ப்பை அதிகரிக்கின்றன.

**யாருக்கு வர வாய்ப்பு உள்ளது?**

- குடும்பத்தில் சிறுநீரகக் கல் பாதிப்பு வந்தவர்கள் 40 வயதைக் கடந்தவர்கள்
- பெண்களைக் காட்டிலும் ஆண்கள்
- போதுமான அளவு நீர் அருந்தாதவர்கள், நீர்ச்சத்து குறைவாக உள்ளவர்கள்




- அதிகப் புரதம், சோடியம் மற்றும் சர்க்கரை உள்ள உண வுகளை உண்பவர்கள்
- உடல் பருமன் உள்ளவர்கள்




- செரிமானக் குறைபாடு உள்ளவர்கள் (கல்சியம் மற்றும் நீர்ச்சத்தைக் கிரகிக்க முடியாத நிலை)
- சுய மருத்துவம், சில வகையான மருந்துகளை எடுத்துக்கொள்பவர்கள்
- சிறுநீரக நோய்த் தொற்று பாதிப்பு உள்ளவர்கள்

**தவிர்க்க...**

தினமும் இரண்டு முதல் இரண்டரை லீற்றர் வரை தண்ணீர் அருந்த வேண்டும்.

ஆக்சலேட் அதிகம் உள்ள பால், பால்சார்ந்த பொருட்கள், பசலைக்கீரை, முட்டைகோஸ், கிழங்கு வகைகளைக் குறை த்துக் கொள்ள வேண்டும்.

- கோலா உள்ளிட்ட குளிர் பானங்களைத் தவிர்க்க வேண்டும்.
- உப்பைக் குறைவாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
- இறைச்சி உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். (அதிக அளவில் புரதம் உள்ளது) இதற்குப் பதிலாகக் காய்கறி மூலம் கிடைக்கும் புரதத்தை எடுத்துக் கொள்ளலாம்.

கல்சியம் சத்து நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், கல்சியம் சத்து மாத்திரைகள் எடுக்கும்போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.mahinda2015.com

சங்கைக்குரிய தேரர்களே, மதகுருமார்களே,
அன்பிற்குரிய கணவான்களே, சீமாட்டிகளே, செல்விகளே...

# “அரச சேவையிலுள்ள நீங்கள், எமது தேசத்திற்கு கௌரவம்.”

நீங்கள் என்னுடைய சகோதர, சகோதரிகளாவீர். இது நாம் வெற்றி கொண்ட அபிமானம் மிக்க தாய்நாடாகும். இலங்கை, அரசாங்கத்தின் சகல அரசியல் மற்றும் அபிவிருத்தித் துறைகள் வெற்றியடைந்த போது நீங்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போன்று எங்களுக்கு பேராதரவை அளித்தீர்கள். 2005ம் ஆண்டில் நீங்கள் என்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தீர்கள். எங்கள் தாய்நாட்டை விடுவிக்கும் பொறுப்பையே அன்று என்னிடம் ஒப்படைத்தீர்கள். இந்த பொறுப்பை ஒப்படைத்த பின்னர் என்னை கைவிடாமல் தொடர்ந்தும் எனது அபிவிருத்தி பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினீர்கள். அரச ஊழியர்களான நீங்கள் பொறுப்புடன் சிறப்பாக பணியாற்றினீர்கள் இதன் மூலம் அரசாங்கத்தை வலுவான அடித்தளத்தில் நிலைத்திருக்கச் செய்தீர்கள். இவ்விதம் எனக்கு ஆதரவளித்தீர்கள். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு யுத்தத்தை நிறுத்த வேண்டிய நிலை உருவாகியிருந்தது. இதனால் பயங்கரவாதத்தை முழுமையான ஒழித்துக்கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்விரு பணிகளையும் என்னால் சாதிப்பதற்கு உங்களிடையே ஒன்றுமையும் ஐக்கியமும் நிலவியதே பிரதான காரணமாக அமைந்தது.

2010ம் ஆண்டில் நீங்கள் எனக்கு இன்னுமொரு பொறுப்பை ஒப்படைத்தீர்கள். அது எங்கள் நாட்டை அபிவிருத்தி செய்யும் பொறுப்பாகும். இதில் பொருளாதார அபிவிருத்தி மட்டுமன்றி சமூக அரசியல் அபிவிருத்தியும் இணைந்திருந்தது. 2010ம் ஆண்டு முதல் இன்று வரை இவ்விருதுறைகளிலும் சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி நாட்டை துரித கதியில் முன்னேற்ற பாதையில் எடுத்துச் செல்லும் சாதனையை ஏற்படுத்தியுள்ளோம். நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்திய பின்னர் நாம் அடைந்த வெற்றிகள் பெருமளவு பயனுள்ளதாக அமைந்துள்ளது. 2009ம் ஆண்டிற்கு பின்னர் நாடு முன்பிருந்ததைவிட எந்தளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது? 2010ம் ஆண்டிற்கு பின்னர் முன்பிருந்ததைவிட பொருளாதார அரசியல் அபிவிருத்தி துறைகளில் நாடு பிரமிக்கத்தக்க அளவிற்கு முன்னேற்றம் அடைந்தது. இவை எல்லாவற்றுக்கும் நீங்கள் மகிழ்ச்சிகரமான பிரதிபலிப்பை தருவீர்கள் என்பது எனக்கு நன்கு தெரியும்.

நாட்டின் அபிவிருத்திக்கு அரச ஊழியர் சேவை அத்தியாவசியமானது என்பதை நீங்கள் உங்கள் பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றி ஊர்ஜிதம் செய்துள்ளீர்கள். நாம் அரச ஊழியர் சேவை ஒரு கௌரவமான சேவையாக அதிஉன்னத நிலைக்கு கொண்டு வருவதற்கு எத்தனித்த போது அதனை வலுவிழக்கச் செய்து அதற்குரிய சலுகைகளை குறைத்து அரச ஊழியர் சேவை துச்சமாக மதித்து வந்த ஒரு காலம் இருந்தது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும். அரசாங்க சேவை நாட்டிற்கு பெரும் பளுவாக அமைந்திருக்கின்றது என்று தெரிவித்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, அரசாங்க ஊழியர் சேவை எந்த வகையிலும் பொருத்தமற்றது என்ற நிலைப்பாட்டை முன்பிருந்த அரசாங்கங்கள் கடைபிடித்து வந்தன.

நான் உங்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தேன். நீங்கள் செய்யும் சேவைக்கு பொருத்தமான சம்பளத்தையும் பெற்றுக்கொடுத்தேன். எந்தவொரு அரசாங்க திணைக்களத்தையோ, தேசிய சொத்துக்களையோ விற்றுவிடுவதற்கு நாம் இடமளிக்கவில்லை. முன்பு இருந்த அரசாங்கங்கள் விற்ற அரசுக்கு சொந்தமான பல நிறுவனங்களை நாம் மீண்டும் அரச உடமையாக்கியுள்ளோம். அதுபோன்று அரச சேவையின் ஆளணியை 6 இலட்சத்தில் இருந்து 14 இலட்சமாக அதிகரித்தும் இருக்கிறோம். இவ்விதம் சகல பொது மக்களுக்கு தேவையான சேவைகள் அனைத்தும் அபிவிருத்தி செய்து பாரிய அபிவிருத்தியை நோக்கி நாட்டை முன்னெடுத்து செல்வதற்கு எங்களுக்கு முடிந்தது. உங்கள் பிள்ளையை வாழ்க்கையில் வெற்றியடையச் செய்துள்ளோம். அவர்களின் திறமையை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பை அளித்து அப்பிள்ளைகளை உலகையே வெல்லக்கூடிய அளவிற்கு நாம் உயர்த்தியுள்ளோம்.

முன்னைய அரசாங்கங்கள் உங்களிடம் இருந்து பறித்த ஓய்வூதியத்தை நாம் மீண்டும் பெற்றுக் கொடுத்து ஒன்பது வருடங்களுக்கான அபிவிருத்தியின் பயனை உங்களுக்கு வழங்கியதுடன் நீர், மின்சக்தி மற்றும் எரிவாயுவின் விலையை குறைத்து, உங்களுடைய வாழ்க்கைச் செலவையும் குறைப்பதற்கும் எங்களால் நடவடிக்கை எடுக்க முடிந்தது. உங்களுடைய தன்னலம் அற்ற சேவைக்கு நட்பயனை அளிக்கும் எண்ணத்துடனேயே நாம் இவ்விதம் உங்களுக்கு உதவி செய்துள்ளோம்.

2015 ஒரு புதிய புத்தாண்டு அல்ல. யுத்தத்தினாலும் பயங்கரவாதத்தினாலும் அழிவை எதிர்நோக்கி மீண்டும் தலைநிமிர்ந்து கம்பீரமாக நிற்கும் எங்கள் தாய்நாட்டின் புதிய இலட்சியங்களுடன் ஆரம்பமாகும் ஒரு புத்தாண்டு இதுவாகும். 2005ம் ஆண்டு முதல் அபிவிருத்திற்காக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள், ஜனநாயகத்தின் மேம்பாட்டிற்காகவும், நல்லாட்சியை நிலவச் செய்வதற்காகவும் நாம் வலுவான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் நிலைபெறச் செய்வதற்கான முதலாவது நிபந்தனையை நிறைவேற்றிய பின்னர் இரண்டாவது நிபந்தனையான வலுவுடன் நாட்டை முன்னேற்ற பாதையில் வீறுநடைபோடச் செய்யும் முயற்சிகளுக்கும் இப்போது நல்ல பலாபலன்களை கொண்ட வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளது. இந்தத் தடவை மீண்டும் நான் உங்கள் ஆணையை எதிர்பார்த்து நாட்டிற்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளை தோற்கடித்து, எதிர்கால சந்ததியினருக்காக இந்த நாட்டின் அபிவிருத்தியின் வெற்றியை பாதுகாப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காகவே இதற்கான ஆணையை உங்களிடம் கேட்கிறேன்.

தனிமனிதனையும், குடும்பத்தையும், கிராமத்தையும், பிரதேசத்தையும் நாட்டையும் ஆன்மீகரீதியில் முன்னெடுத்துச் சென்று நல்லொழுக்கமுடைய ஒரு சமுதாயத்தின் பங்குதாரர்களாக இணைந்து, இந்நாட்டை ஆசியாவில் மட்டுமல்ல முழுஉலகிலும் அதி உன்னத நிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் எங்களை தயாராக்கிக் கொள்ள வேண்டும். அதற்காக எங்கள் தாய்நாட்டின் பொறுப்புள்ள பிரஜைகள் என்ற முறையில் அரச ஊழியர்களின் கடந்தகால எதிர்கால தியாக உணர்வுடைய சேவை, ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமை இந்நாட்டிற்கு எதிர்காலத்தில் அவசியமாகும். ஜனாதிபதி தேர்தலில் தாய்நாட்டின் மீது பற்றுள்ள நீங்கள் உங்கள் முன்னேற்ற பயணத்தின் தலைவராக என்னை தெரிவு செய்வீர்கள் என்று எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் நிச்சயம் தெரியும். வாருங்கள் நாட்டை கட்டியெழுப்பி அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டு நாட்டை வெற்றி பாதையில் இட்டுச் செல்லும் தலைவர்களாக மாறுவோமாக.

2015ம் ஆண்டு உங்களுக்கு வளமான சகல சௌபாக்கியங்களும் கொண்ட ஒரு வருடமாக அமைய வேண்டும்.

உங்கள் அன்பிற்குரிய



பாதுகாப்பான தேசம்
வளமான எதிர்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புரிந்து கொள்ளாத மக்கள்

அன்னாவரம் என்ற கிராமம் மலைகள் சூழ்ந்த இயற்கை எழில் நிறைந்த கிராமம்.

அங்கிருந்த விவசாயிகள் பல நூதனமான பயிர்களை விவசாயம் செய்து வந்தனர்.



பலவிதமான கிழங்குகளையும், பழமரங்களையும் மூலிகைகளையும் பயிர செய்து, அவற்றையே தங்கள் முக்கிய உணவாகவும் கொண்டு இருந்தனர்.

அந்த கிராமத்தில் குணவர்மன் என்ற இளைஞன் வசித்து வந்தான்.

சிறுவயது முதலே, அவன் தீவிர சிந்தனையாளனாக இருந்தான்.

எப்போதும், எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டேயிருந்தவனை, கிராமத்தினர் சோம்பேறி என்று இளக்காரம் செய்தனர்.

அவனுடைய வாழ்க்கையின் கண்ணோட்டமே வேறுவிதமாக இருந்தது.

கிராமத்து மனிதர்களுடைய வாழ்க்கை முறை அவனுக்குப் பிடிக்கவில்லை.

"கடவுள் கொடுத்த பகுத்தறிவை நன்குப் பயன்படுத்த வேண்டும்.

கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் உலகில் எத்தனையோ இருக்கின்றன என்பது போன்ற அவனுடைய புதுமையான சிந்தனைகள் கிராமத்தினரின் மூளையில் நுழையவில்லை.

தன்னுடைய புதிய கருத்து களை யாரும் ஏற்காததால் சலி ப்படைந்த குணவர்மன் ஒரு நாள் தன் தந்தையிடம், "அப்பா! இங்குள்ள மக்கள் இயந்திரம் போல் இயங்குகின்றனர்.

இங்கிருந்தால் என் வாழ்க்கை வீணாகி விடும்! தண்ட காரணயக் காட்டில் புஜங்கர் என்பவர் நடத்தும் குருகுலத்தில் சேர்ந்து, என் கல்வி அறிவை அபிவிருத்தி செய்து கொள்ள விரும்புகிறேன்.

பிறகு அங்கிருந்து திரும்பி வந்து, எந்த கிராமத்தினர் என்னை ஏளனம் செய்கின்றனரோ, அவர்கள் எனக்கு மரியாதை செலுத்துமாறு செய்வேன்! என்று கூறி விட்டு, தண்ட காரண்யத்தை நோக்கிச் சென்றான்.

புஜங்கரின் ஆசிரமத்தை நெருங்கிக் கொண்டு இருக்கையில், ஒரு தேர் அவன் பின்னால் வந்தது.

அவனிடம் வந்து தேரை நிறுத்திய தேரோட்டி, தம்பி! நீ எங்கு செல்கிறாய்? என்று கேட்க, குணவர்மன் பதில் சொல்லவும், அவன், நானும அங்குதான் செல்கிறேன்! நீயும் தேரில் ஏறிக்கொள்! மன்னரின் தாய்க்கு உடல் நலை சரி யில்லாததால், புஜங்கரை அழைத்துச் செல்ல நான் வந்திருக்கிறேன்! என்று கூறி விட்டு குணவர்மனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான்.



குருகுலத்தை அடைந்ததும், குணவர் மன் புஜங்கரை கால்களில் விழுந்து வணங்கித் தன் விருப்பத்தை வெளியிட்டான்.

அதற்கு அவர், மகனே! என்னிடம் சீடனாகச் சேர வேண்டுமெனில், அதற்கு முன் ஜம்புகாரண்யத்தில் என் பழைய மாணவர் வினயர் ஒரு குருகுலம் நடத்தி வருகிறார்.

அங்குசென்று இரண்டு ஆண்டுகள் பயின்ற பிறகு நீ இங்கு வா! என்றார்.

"குருவே! உங்களுக்கு என் அறிவுத் திறமையில் சந்தேகம் என்று நினைக்கிறேன். வேண்டுமானால் நீங்கள் என் அறிவை சோதித்துப் பாருங்கள்! என்றான்.

"மகனே! இப்போது நான் அரண்மனைக் குச்செல்ல வேணடி இருக்கிறது. திரும்பி வர எனக்கு ஒரு வாரம் ஆகும்! அது வரை இந்த இரண்டு கிரந்தங்களை உன்னிடம் தருகிறேன்.

இவற்றை கவனமாகப் படி! இவற்றினுடைய கருத்தை நீ நன்றாகப் புரிந்து கொண்டால் மட்டுமே, நீ என் சீடனாக அமையத் தகுதியுள்ளவன்! என்று கூறி விட்டு அரண்மனை தேரில் ஏறிச் சென்று விட்டார்.

உடனே, மற்ற சீடர்கள் அவனிடம், "இரண்டு ஆண்டுகளாக இவற்றைப் புரிந்து கொள்ள நாங்கள் படாதபாடு படுகிறோம்.

அப்படி இருக்க, உன்னால் ஒரு வாரத்தில் புரிந்து கொள்ள முடியுமா? என்று அவனை பயமுறுத்தினர்.

ஆனால் குணவர்மணா, "இதை நான் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்கிறேன்! என்று சொல்லிவிட்டு, கிரந்தங்கள் இயற்றப்பட்டிருந்த ஓலைச்சுவடிகளை ஆழ்ந்து படிக்கத் தொடங்கினான்.

நான்கே நாள்களில், அவற்றின் சாரத்தை குணவர்மன் நன்றாக கிரகித்துக் கொண்டான்.

மற்ற சீடர்களை அழைத்துத் தான் புரிந்து கொண்ட விஷயங்களை அவர்களுக்கு விளக்கினான்.

ஆனால் அவர்கள் அவ்னுடைய அறிவுத்திறமையை தாழ்வாக மதிப்பிட்டு எள்ளி நகையாடினர்.

கோபங்கொண்ட, குணவர்மன், "உங்களுக்கும் என் கிராமத்து மக்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை.

அவர்கள் படிக்காத முட்டாள்கள்! நீங்கள் படித்த முட்டாள்கள்! என்று சினந்தான்.

அரண்மனையிலிருந்து திரும்பிய புஜங்கர், வந்ததும் உடனே குணவர்மனை கிரந்தங்களின் விளக்கம் கேட்டார்.

(தொடரும்)

12.2014
23

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1783 - ஜோர்ஜ் வாஷிங்டன் இராணுவத்தளபதி பதவியிலிருந்து விலகினார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்துப் படைகள் கெய்ரோவில் தரையிறங்கினர்.
- 1916 - முதலாம் உலகப் போர்: எகிப்தின் சினாய்க் குடாவில் கூட்டுப் படைகள் துருக்கியப் படைகளுடன் இடம் பெற்ற சமரில் வெற்றி பெற்றனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய இராணுவம் வேக தீவைக் கைப்பற்றியது.
- 1947 - முதலாவது டிரான்சிஸ்டர் பெல் ஆய்வுகூடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 1948 - பிரதமர் டோஜோ உட்பட ஏழு ஜப்பானியப் போர்க் குற்றவாளிகளுக்கு டோக்கியோவின் சுகோமோ சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1954 - முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் மேற்கொள்ளப்பட்டது.
- 1958 - டோக்கியோ கோபுரம், உலகின் மிகப்பெரிய இரும்பினாலான கோபுரம், திறக்கப்பட்டது.
- 1979 - சோவியத் படையினர் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலைக் கைப்பற்றினர்.
- 1986 - எங்கும் தரையிறங்காமல் முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த வொயேஜர் விமானம், டிக் ரூட்டன், ஜீனா யேகர் ஆகிய விமானிகளுடன் கலிபோர்னியாவில் தரையிறங்கியது.
- 1990 - 88% சிலொவேனிய மக்கள் யூகொஸ்லாவியாவிலருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர.
- 2004 - தெற்குப் பெருங்கடலில் உள்ள மக்குவாரி தீவில் 8.1 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 2005 - சாட் சூடானுடன் போரை அறிவித்தது.


### பிறப்புகள்

- 1807 - அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய ரோமன் கத்தோலிக்க மறைப்போதகர் (இ. 1870)
- 1902 - சரண் சிங், இந்தியக் குடியரசின் 7ஆவது பிரதமர் (இ. 1987)
- 1956 - பொன்னம்மான், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் (இ. 1987)

### இறப்புகள்

- 1907 - பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் (பி. 1824)
- 1972 - அந்திரே தூப்பொலியெவ், சோவியத் விமான வடிவமைப்பாளர் (பி. 1888)
- 1981 -பி. கக்கன் இந்திய விடுதலை போராட்ட வீரர், (பி.1908)
- 2004 - பி. வி. நரசிம்மராவ் ஒன்பதாவது இந்தியப் பிரதமர் (பி. 1921)
- 2013 - மிக்கைல் கலாசுனிக்கோவ், ஏகே47 துப்பாக்கியை வடிவமைத்தவர் (பி. 1919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து - 28**

...காஞ்சுகெடந்த அரசங்குச்சிய வச்சுத் தரையில கோலம் கிழிச்சுக்கிட்டிருந்த கருவாச்சி இந்தச் சொல்லக் கேட்டாளோ இல்லையோ தீப்புடிச்ச மாதிரி குபீர்னு எந்திரிச்சு நின்னா.

பஞ்சாயத்துல ஒப்படச்ச பொருள் எதுவேணுமோ எடுத்துக்கிருங்க- இல்ல எல்லாமே வேணுமா எடுத்துக் குடுத்துருங்க.

என் உசுரே போனாலும் தாலிச்சரட்டும் தரமாட்டேன். தாலிச்சரடு வேணுங்கிற ஆம்பள என் தலைய அறுத்தெறிஞ்சிட்டு அப்பறம் தாலியெடுத்திட்டுப் போகட்டும்.

இப்படி ஒரு குண்டைத் தூக்கி போடுவா கருவாச்சின்னு யாரும் எதிர் பார்க்கல.

கருவாச்சியா இப்படிப் பேசுறான்னு நம்பவும் இல்ல.

ஒரு ஈ காக்கா பேசல.

ஏண்டி! தாலி கழுத்தில கெடந்தா என்னைக்கிருந்தாலும் ஒன் புருசன் வந்திருவான்னு பாக்கிறியா? கத்துறான் கட்டையன்.

இல்ல.

இந்த சென்மத்துல நீ எனக்குப் புருசனுமில்ல; இந்த பூமியில பெறந்த எந்த ஆம்பளையும் எனக்குப் புருசனாகப் போறது இல்ல.

பொழச்சிருவியாடி இந்த பூமியில.. ஆம்பள தொண இல்லாம?

பொழைக்கிறேன்.. பொழைச்சுக் காமிக்கிறேன்.

பந்தயம் போடுறியா? செயிச்சுருவியா?

செயிச்சிக்கிறேனோ இல்லையோ.. நான் தோக்கமாட்டேன் மாமா;

ஊரே அருளேறி நிக்கிது.

ஆம்பளைக பொம்பளைக கண்ணுல கண்ணீரா முட்டுது.

அக்காம விட மாட்டேன்னு கருவாச்சி மேல பாயப் போன கட்டையன நாலு எளந்தாரிக இழுத்துப் பிடிக்க- அத்துப்பாருன்னு மொதலக் கம்பட்டி ஆளுக அவளச் சுத்தி அணகட்டி நிக்க அமளிதுமளியாகும் பஞ்சாயத்து.

தாலிச்சரடு தர முடியாதுங்கிற பொம்பளைய -தந்தே ஆகணும்னு சொல்லப் பஞ்சாயத்துக்கு அதிகாரமில்லன்னு தீர்ப்புச் சொல்லிக் கலையுது பஞ்சாயத்து.

மாரடிச்சு அழுதுபோறா பெரிய மூக்கி. பின்னாலேயே கருவாச்சியும் நடந்து போறா.



நெஞ்சுல தாலியோட நெஞ்சுக் கூட்ல வைராக்கியத்தோட.

அத்துவிட்டுட்டு வந்த வீடு இருக்கே... அதுவும் ஒரு வகையில எழவு வீடுதான்.

வித்தியாசம் என்னான்னா - அங்க ஒடம்பு செத்துப்போகுது.

இங்க ஒறவு செத்துப் போகுது. மத்தபடி ஆள் செத்த வீட்டுக்கு உண்டான அத்தன மரியாதைகளையும் அத்துவிட்ட வீட்டுக்கும் ஓடி வந்து செய்வாக ஊர் ஆளுக.

பசு மாட்டுச் சாணிகரைச்சுப் பசேல்னு வாசல் மொழுகி, கருவாச்சி தலையில சல்லுச் சல்லுன்னு மஞ்சத் தண்ணி அள்ளித் தெளிச்சு, மகளக் கட்டிப்புடிச்சு ஊரே கேளு நாடே கேளுன்னு நெஞ்ச வெடிச்சு விழுக ஒப்பாரியில கூடிட்டா பெரிய மூக்கி.

"கருவாச்சி கூந்தலுக்குக்
கைநெறையப் பூவு வச்சேன்
தலப்பூவு வைக்கயில
தலையெலுத்த அறியலையே
தாலிச்சரடிருக்குச்
சரஞ்சரமாப் பூவிருக்கக்
கட்டுனவன் வாழ்ந்திருக்கக்
கைம் பொண்ணா நிக்கிறாளே"

மார்மேல ஒரு அடி மகமேல ஒரு அடின்னு மாத்தி மாத்தி அடிச்சுப் பெரியமுக்கி கத்திக் கதறவும் ஊர் பொம்பளைக கூடித் தாய் மகளத் தனித்தனியாப் பிரிச்சு விட்டுத் தெம்பு தெறம் சொல்றா.

ஏய் விடுடி! என்னமோ பிள்ள சாகக் குடுத்தவ மாதிரி ஒப்புச் சொல்லி அழுகுறவ.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...நாம் வாழ்க்கையில் அதற்குப் பிறகு செய்வதற்கு எதுவுமில்லை என்பது போல் உணர்கிறோம். சுமை மிகவும் குறைந்துவிட்டதுபோல் உணர்கிறோம். நமது பிரச்சனைகள் திடீரென்று மறைந்து விடும்பொழுது நம்மால் சரியாக சிந்திக்க முடியாதது போல் உணர்கிறோம். ஏனெனில் நாம் நமது பிரச்சினைகளைக் கடந்து சிந்தித்ததேயில்லை.

## கவலைகள் இன்றி வாழ்தல்!

உங்களுடைய எல்லா மன இறுக்கங்களும் கவலைகளும் உண்மையிலேயே நிஜத்திலிருந்து நீங்கள் மறைந்துகொள்ளும் ஆறுதல் பிரதேசங்கள். உங்களுக்கு உண்மையிலேயே ஏதேனும் செய்து முடிக்கப்பட வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் அதைச் செய்வதிலிருந்து உங்களைத் தடுப்பது எது?

நீங்கள் ஏன் உங்களை மன இறுக்கத்திலும் கவலையிலும் மூழ்கடித்துக் கொள்ள வேண்டும்? நீங்கள் இதைச் செய்வதற்குக் காரணம் ஒரு வேளை உங்களிடம் நிறைய நேரம் இருக்கலாம். அல்லது உண்மையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இருக்கலாம். அல்லது இத்தனை மன இறுக்கத்தையும் கவலையையும் வைத்திருப்பதில் பெருமிதமாக இருக்கலாம் அவ்வளவே!

அதனால் வாழ்க்கைமுறை மக்கள் முதலியவை பற்றிய எல்லாக் கற்பனைகளையும் விட்டுவிட்டு இந்தக் கணத்தில் வாழத் துவங்குங்கள்; மற்றவை தானாகவே நிகழும். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்... உங்களால் இந்த ஆறுதல் பிரதேசத்தில் நீண்ட காலம் வாழ முடியாது. ஒரு நாள் இல்லாவிடிலும் இன்னொரு நாள் நிஜத்தைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும்.



அதனால் விழி[illegible]குங்கள். விழி[illegible] தீர்மானங்களை எடுங்கள். நீங்கள் எடுத்த ஒவ்வொரு தீர்மானத்திற்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ளுங்கள்.

இன்னொருவருடைய தீர்மானத்தின் படி சென்றுவிட்டு இறுதியில் அவர்கள் மீது பழிபோடுவது மிகவும் சுலபமானது. அதை ஒருபோதும் செய்யா[illegible]தீர்கள். அது மிகவும் முட்டாள்தன[illegible] கோழைத்தனமாக செயலாகும். ஒருபோதும் யாரையும் எதற்காகவும் பழி சொல்லாதீர்கள். உங்கள்ால் எதையேனும் கையாள முடியாத பட்சத்தில் மட்டுமே மற்றவர்கள் மீது பழி போடுகிறீர்கள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

ஸ்வாமிஜி.. எப்பொழுதும் ஓய்வாகவும் தளர்வாகவும் இருப்பது எப்படி?

உங்கள் விழிப்புணர்வு எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்குமானால் நீங்கள் எப்பொழுதும் ஓய்வாகவும் தளர்வாகவும் இருக்கலாம். இந்த

**ஆன்மீகம் 113**

நிலையை அடைவதற்கு தியானம் ஒரு திறவுகோலாகும். குறைந்தபட்சம் புத்தி பூர்வமான நிலையிலிருந்தாவது இதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். பிறகு இதைச் சிறு சிறு இடைவெளிகளில் உணர ஆரம்பிப்பீர்கள். சிறிது சிறிதாக இந்த இடைவெளிகள் பெரிதாக்கப்பட்டு இறுதியில் அது உங்கள் நிரந்தரமான நிலையாகிவிடும்.

நான் எப்பொழுதும் சொல்வதுண்டு... ஒரு குரு உண்மையாக குருவா என்பதைக் கண்டறிய அவர் தூங்கும் பொழுது கவனியுங்கள். உண்மையான குரு தூங்கும் பொழுது பூனைப் போல இருப்பார்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TCT MULTI TRADE CENTRE

# ரிசிரி பல்பொரு

# TCT Multi Tr

## அறப்பணிக்காக ஸ்தாபிக்கப்பட்ட உங்கள் ரிசிரி பல்பொருள் வி

## சிந்தியுங்கள் விரையுங்கள் சேமியுங்கள்

### கையிருப்பு உள்ளவரை மட்டுமே !

| இவற்றை வாங்கினால் | இவை இலவசம் |
|---|---|
| **Maam Biscuits** | |
| 1.Chocolate Chips – 250g | -Cocount Cookies-150g |
| 2.Milk Shorties – 320g | -Ginger Shorties- 60g |
| 3.Banana Cream – 360g | -Lemon Puff – 100g |
| 4.Chocolate Cream – 360g | -Lemon Puff – 100g |
| 5.Apple Cream – 360g | -Lemon Puff – 100g |
| 6.Better Carols – 270g | -Ranwan Marie- 80g |
| 7.Ginger Shorties – 260g | -Ranwan Marie – 80g |
| **Maliban Biscuits** | |
| 8.White Chocolate Puff – 200g | -Light Marie – 65g |
| 9.Lemon Puff – 400g | -Doubles Cream – 100g |
| 10.Chocolate Cream - 250g | -Gold Marie– 80g |
| **Little lion Biscuits** | |
| 11.Milky Cookies – 400g | -Coconut Cookies – 200g |
| **Lucky Land Biscuits** | |
| 12.Ginger'n rice – 400g | -Bourbon -100g |
| 13.Milky Glucose – 300g | -Orange Cream Smiley's –100g |
| 14.Choco & Butter – 400g | -Bourbon – 150g |
| **Master Biscuits** | |
| 15.Choco Rings – 300g | -Bourbon – 100g |
| 16.Batter Rings – 300g | -Bourbon – 100g |
| 17.Milk Biscuits | -Bourbon – 100g |
| 18.Marie Mega Pack – 300g | -Bourbon – 100g |
| 19.Prima Special Noodles – 430g | -Anna Roasted Red Rice Flour-400g |
| 20.Ruhunu Noodles – 400g | -Ruhunu Soya Meat – 65g |
| 21.Rasa Hari Special Noodles – 400g | -lanka Soy – 50g |
| 22.Samaposha 200g x 2Pck | -Samaposha – 80g |
| 23.Lanka Soy 90g x 2 Pck | -Samaposha – 80g |
| 24.Ruhunu Soya Meat 3Pck | -Ruhunu Soya – 01 |
| 25.Kandos Promises – 120g | -Choconuts – 90g |
| 26.Ritzbury Chocolate Fingers- 200g | -Choconuts – 60g |

| இவற்றை வாங்கினால் | இவை இலவசம் |
|---|---|
| 27.Ritzbury Chunky Chocolate- 200g | -Chocolate Fingers – 100g |
| 28.Turkey Sun Flower Oil – 200ml | -Noodles– 400g |
| 29.Turkey Sunflower Oil-1L | -Soya 50gx 2Pck |
| 30.Kotmale Chocolate Milk – 1L | -Chox Chocolate Milk– 180m |
| 31.Kotmale Vanilla Milk -1L | -Chox Chocolate Milk– 180m |
| 32.Bambi Baby Diaper | -Baby Soap |
| 33.Clean & Clear Facial Wash – 100ml | -Clean & Clear Facial Wash 50m |
| 34.Natures Secrets Body Lotion | -Papaya Facial Wash–100ml |
| 35.Star Light Wash Powder-1Kg | -400g Star Light |
| 36.Lifebuoy Soap 3 | -Lifebuoy Soap –01 |
| 37.Cheramy Baby Soap 3 | -1 Baby Soap |
| 38.Panda Nappy Wash 500ml | -Panda Baby Cologne -100m |
| 39.Comfort 800ml after Wash | -Comfort Refill pack 200ml |
| 40.Comfort 200ml | - Surf Excel – 80g |
| 41.Horlicks Chocolate 400g | -Lunch box |
| 42.Nestomalt – 400g box | -Maggi Noodles – 84g |
| 43.Nespray Every Day 1Kg | -Milo 200 g |
| 44.Ceylonta Tea 200g | -canister free |
| 45.Prima Stella Noodles 80g | -Book Cover – 1 |
| 46.Zesta Tea 400g | -Free Canister |
| 47.Watawala Pureceylon Tea – 400g | -Exercise book 2 – 80Page |
| 48.Ceylonta Tea – 400g | -Ceylonta Tea100g |
| 49.Zesta Tea 500g | -100g Zesta |
| 50.MD Mango Delight – 850ml | -MD Tomato Sauce – 200ml |
| 51.MD Orange Delight – 850ml | -MD Tomato Sauce – 200ml |
| 52.MD Mixed Cordial – 750ml | -MD Soya Sauce – 190ml |
| 53.MD Mixed Fruit Cordial – 750ml | -Coconut Vinegar 350ml |
| 54.MD Sherbet Syrup | -Kheer Pudding Mix – 100g |
| 55.Gliz Dish Wash Liquid | -Brush |
| 56.Comox Toilet Cleaner – 500ml | -Toilet Brush |
| 57.Garnier Fructis Shampoo | -Fairness Cream 18g |
| 58.Loreal Shampoo – 175ml | -75ml Shampoo |
| 59.Mortine Spray | -Coil 1 Box |

அத்துடன் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு கேக் தயாரிப்பதற்கான பொருட்கள் மிகக் குறைந்த விலையில் கொள்வனவு இலகுபடுத்தலுக்காக முன்பக்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கேக் வகைகளுக்கு 10% விலைக்கழிவு வழங்கப்படுகின்றது.

புதிய வகுப்பில் கால்பதிக்கும் மாணவ செல்வங்களுக்குரிய அப்பியாச கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் காலணி வகைகள் ஆச்சரியமூட்டும் விலைக்கழிவில் விற்பனை செய்யப்படுகின்றது. கொள்வனவுக்கு ஏற்ப மாணவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்படும்.

இந்நாட்களில் 500ml,1l,2l,4l,5l Elephant House ஐஸ்கிறீம் வகைகளுக்கு 10% விலைக்கழிவு வழங்கப்படும்.

- 21.12.2014 இல் இருந்து 31.12.2014 வரை ருபா
கொள்வனவு செய்வோருககு உடனடியாக பெறும
இக்காலப்பகுதியில் ரூபாய் 1000/- மேல் பெ
யாளர்களில் 100 வாடிக்கையாளர்கள் குலுக்க
வழங்கப்படும்.
- உங்கள் நுகர்வுத் தேவைகளை ஒரே இடத்தில்
முந்துங்கள்!

**TCT பான்சியகம்**

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அழகு சாதனப்பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் தளபாட வகைகள் என்பன எங்கும் இல்லாதவாறு தமது சுயதெரிவுகளுக்கமைய ஒழுங்கமைக்கப்பட்ட எமது அழகு சாதனப்பகுதியில் உத்தரவாதத்துடன மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

இக்காலப் பகுதியில்...

Osram CFL வல்புகளுக்கு 20% விலைக்கழிவும், குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் 3 வாடிக்கையாளர்ளுக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். கிறிஸ்மஸ் அலங்காரப் பொருட்கள், பாடசாலை மாணவர்களின் காலணிகள், தண்ணீர்ப் போத்தல் சாப்பாட்டு பெட்டி என்பவற்றிற்கு 10% விலைக்கழிவும், எலெக்ரிக் பொருட்கள் Panasonic CFL Bulb இற்கு 5% விலைக்கழிவும் ரெயின்கோ பொருட்கள் (குடை, நுளம்பு வலை, ரெயின் கோட்) ஆகியவற்றுக்கு 17% விலைக்கழிவு வழங்கப்படும்.

**உங்கள் திருப்தியே**

எமது வாடிக்கையாளர் உச்ச பயன்பாட்டை
போட்டியினையும் நாம் எதிர் கொள்ள தயாரா



'அறப்பணிே
முதற்
ரிசிரி ப
விற்பனை
527, நாவலர்
யாழ்ப்
தொ:பே:-0
E.Mail:-tctm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருள் வாணிபம்
# rade Centre



## விற்பனை நிலையத்தின் நத்தார், புதுவருட அதிரடி புதுமைகள்!

## 21.12.2014 - 31.12.2014

| | |
|---|---|
| 60.Dettol Soap – 04 Pcs | -Dettol Soap - 01 |
| 61.Vim Liqued – 500ml | -3 Steel wool |
| 62.Dash Car Wash 800ml | -Harpic 200ml |
| 63.Harpic 750ml | -Harpic Powder |
| 64.Air Wick | -Harpic 200ml |
| 65.Lysol 950ml | -Scouring Sponge |
| 66.Lysol 500ml | -Sponge |
| 67.Ariel – 1kg | -Ariel Washing Powder 200g |
| 68.Sani Fresh Toilet Cleaner- 500ml | -Odonil |
| 69.Schick Razor 1 pcs | -1Pcs Schick Razor |
| 70.Nyle Body Lotion 100ml | -Face Wash 50ml |
| 71.Soap Santoor 2 Pcs | -1santoor Soap |
| 72.Clogate Tooth Paste | -1Tooth Brush |
| 73.Velvet Soap – 3 | -1Velvet Soap |
| 74.Cheese Bits – Diana 170g | -wafers 90g |
| 75.Tomato sauce - MD 400g | -Mix fruit Jam 225g |
| 76.Smak Juice – 1L | -Smak Juice -200ml |
| 77.Horlicks Oats – 1Kg | -Boost –200g |
| 78.Kellogg's Oats – 1Kg | -Lakspray –100g |
| 79.Reeborn Hand Wash – 1L | -Papaya Face Wash-120ml |
| 80.Reeborn Papaya Soap – 4 | -Reeborn Papaya Soap – 1 |
| 81.Tile Cleaner Crown – 1L | -Air Freshener – 1 |
| 82.Fortune Sunflower Oil – 2 L | -Fortune Coconut Oil-200ml |

| பொருட்கள் | குறித்தவிலை | எமது விலை | சேமிப்பு |
|---|---|---|---|
| 1.Maliban Gift Selection 400g | 220 | 190 | 30 |
| 2.Maliban Gift Tin 500g | 450 | 400 | 50 |
| 3.Ruhunu String Hopper Flour 1Kg | 142 | 100 | 42 |
| 4.Necto 1.5L | 210 | 180 | 30 |
| 5.Pepsi 2.25L | 250 | 220 | 30 |
| 6.Sustagen Chocolate | 1600 | 1450 | 150 |
| 7.Sustagen Vanilla | 1600 | 1450 | 150 |
| 8.Turkey Sun Flower Oil 2L | 1100 | 1040 | 60 |
| 9.Turkey Sun Flower Oil 1L | 590 | 530 | 60 |
| 10.Turkey sun Flower Oil 3L | 1625 | 1550 | 75 |
| 11.Fortune Sun Flower Oil 2L | 1100 | 940 | 60 |

| பொருட்கள் | குறித்தவிலை | எமது விலை | சேமிப்பு |
|---|---|---|---|
| 12.Fortune Sun Flower Oil 1L | 590 /- | 520 /- | 70 /- |
| 13.Fortune Sun Flower Oil 5L | 2550 /- | 2300 /- | 250 /- |
| 14.Fortune Vegetable Oil 5L | 1800 /- | 1520 /- | 280 /- |
| 15.Fortune Vegetable Oil 2L | 740 /- | 640 /- | 100 /- |
| 16.Fortune Vegetable Oil 3L | 1200 /- | 1020 /- | 180 /- |
| 17.Paper Serviettes Eco Plus | 110 /- | 70 /- | 40 /- |
| 18.Eva Dritex Wings (2pcs) | 230 /- | 200 /- | 30 /- |
| 19.Colgate Active Salt – 200g | 430 /- | 160 /- | 270 /- |
| 20.Rich Life Full Cream Fresh Milk 1L | 185 /- | 160 /- | 25 /- |
| 21.Ambewela Fullcream Fresh Milk | 185 /- | 160 /- | 25 /- |
| 22.Onjus Gold 1 L | 270 /- | 240 /- | 30 /- |
| 23.Onjus 1L | 225 /- | 200 /- | 25 /- |
| 24.Nestle Milk Maid 510g | 240 /- | 220 /- | 20 /- |
| 25.Nescafe – 200g | 1155 /- | 1000 /- | 155 /- |
| 26.MD Pineapple Jam -485g | 290 /- | 265 /- | 25 /- |
| 27.Sunquick Fruit Cocktail 840ml | 680 /- | 580 /- | 100 /- |
| 28.Sunquick Orange 840ml | 680 /- | 580 /- | 100 /- |
| 29.Vegetable Oil 3L-Vegetable | 1150 /- | 980 /- | 170 /- |
| 30.Fair and Handsome 60g | 260 /- | 234 /- | 26 /- |
| 31.Delmege Tin Fish Mackerel -425g | 250 /- | 180 /- | 70 /- |
| 32.Dream Softener With Liquid Detergent | 750 /- | 600 /- | 150 /- |
| 33.Loreal Shampoo- 400ml | 1270 /- | 999 /- | 271 /- |
| 34.Garnier Shampoo- 400ml | 935 /- | 750 /- | 185 /- |
| 35.Garnier men Oil – 100ml | 835 /- | 690 /- | 145 /- |
| 36.Astra – 500g | 335 /- | 300 /- | 35 /- |
| 37.Miranda 2.25L | 250 /- | 220 /- | 30 /- |
| 38.Sausages-Keells 500g | 470 /- | 430 /- | 40 /- |
| 39.Chicken - prima 1kg | 380 /- | 330 /- | 50 /- |
| 40.French fries 1kg | 750 /- | 650 /- | 100 /- |
| 41.Super Star Butter Cake – 750g | 300 /- | 250 /- | 50 /- |
| 42.Super Star Fruit Cake – 1Kg | 360 /- | 300 /- | 60 /- |
| 43.Super Star Butter Cake – 1Kg | 350 /- | 290 /- | 60 /- |
| 44.Super Star Butter Cake – 500g | 230 /- | 190 /- | 40 /- |
| 45.Captain Tin Fish- 425g | 295 /- | 255 /- | 40 /- |
| 46.Pen Atlas Chooty | 30 /- | 15 /- | 15 /- |
| 47.Cial Pen – 6 | 60 /- | 40 /- | 20 /- |

பாய் 15,000/- மேல் பொருட்களை ஒரே நாளில் றுமதிமிக்க அன்பளிப்பு பொருள் வழங்கப்படும்.
பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கை க்கல், மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள்

நிறைவு செய்யவும், பருவகால சலுகைகளுக்கும்

**யே எங்கள் நிறைவு!**

பெறுவதற்கு எந்த ஒரு நியாயமான வியாபார ராகவுள்ளோம்.

**ியே எங்கள்**
**பணி'**



பல்பொருள்
ன் நிலையம்
ர் வீதி, நல்லூர்,
ப்பாணம்.
:-0217451895
mc@dialognet.lk

இத்துடன் மேலும் எமது வழமையான சலுகைகள்

- எமது விற்பனை நிலையத்தில் 10000/- க்குமேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு 4 Km தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு இலவச வாகன வசதி வழங்கப்படுகின்றது. (நிபந்தனைக்குட்பட்டது)
- இரண்டு மாதத்திற்குள் 25,000 ரூபாவிற்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்பவருக்கு 500/- Gift Voucher வழங்கப்படுகின்றது.
- அத்துடன் எமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி எம்மால் 150க்கு மேற்பட்ட பொருட்கள் (பால்மா, எண்ணெய் வகைகள் உட்பட) குறித்த விலையிலிருந்து விலை குறைப்பு செய்யப்பட்டு தொடர்ச்சியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையை வாடிக்கையாளர்களுக்கு ஞாபகமூட்டுகின்றோம்

**TCT புடைவையகம்**

விரைவாக மாறிவரும் நாகரிக மாற்றத்திற்கு ஏற்ப அனைத்து வயதினருக்கும் ஏற்ற புடைவை வகைகள் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் தெரிவு செய்யப்பட்ட

- இருபாலாருக்குமான ஜீன்ஸ் வகைகள், சேட் வகைகள், பிளவுஸ் வகைகள் என்பனவற்றிற்கு 10% விலைக்கழிவும்
- தெரிவுசெய்யப்பட்ட ஸ்கேட் வகைகளுக்கு 20% விலைக்கழிவு வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேதாஜி மரண மர்மம் நீடிக்கிறது?



...இந்த விசாரணையில் ஒரு திடுக்கிடும் உண்மை வெளியானது மஞ்சூரியாவின் எல்லைக்கு அப்பால் ரஷ்யப் பகுதிகள் தப்பிச் செல்வதே நேதாஜியின் திட்டமாக இருநததது என்பதே அந்த உண்மையாகும்.

### காந்தியடிகளின் அந்தராத்மா

நேதாஜியின் மரணச் செய்தி குறித்து மகாத்மா காந்தி என்ன நினைக்கிறார் என்பது பற்றிப் பிரிட்டிஷ் அதிகாரிகள் வைசிராய் வேவல் பிரபுவிடம் அளித்த குறிப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

,"1946 ஆம் ஆண்டு மாதத் தொடக்கத்தில் காந்தியடிகள் பின்வருமாறு அறிவித்தார். "போஸ் உயிருடன் இருக்கிறார்". எங்கோ மறைந்து கொண்டிருக்கிறார் என்று என்னுடைய அந்தராத்மா சொல்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். போஸ் உயிருடன் இருப்பது சம்பந்தமாக காந்தியடிகளுக்கு இரகசியச் செய்தி வந்திருக்க வேண்டும் என்றும் அதைத்தான் அவரது அந்தராத்மா கூறுவதாக காந்தியடிகள் கூறுவதாகவும் காங்கிரசுக்காரர்கள் கருதுகிறார்கள். தான் ரஷ்யாவில் இருப்பதாகவும், இந்தியாவுக்குத் தப்பிர வர விரும்புவதாகவும் போஸ் ஒரு கடிதத்தை நேருவுக்கு எழுதியிருப்பதாகவும் ஒரு இரகசியச் செய்தி கூறுகிறது.

போஸ் உயிருடன் இருப்பது பற்றி காந்தியடிகளும் சரத் சந்திரபோசும் நன்றாக அறிவார்கள். போஸிடமிருந்து ஒரு கடிதம் வந்த பிறகே போஸ் உயிருடன் இருப்பதாக காந்தியடிகள் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். அதே ஜனவரி மாதத்தில் தன்னுடைய சகோதரர் உயிருடன் இருக்கிறார் எனத்தான முழுமையாக நம்புவதாக சரத் சந்திரபோஸ் தெரிவித்திருக்கிறார். எல்லைப்புற மாநில காங்கிரஸின் தலைவர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் போஸ் டிடியில் இருப்பதாக குறிப்பிடடிருக்கிறார். டி.டி. என்னும் சொற்கள் இரகசிய சங்கேதக் குறியீடாகக் கருதப்பட வேண்டும்"

மகாத்மா காந்தி, மாளவியா போன்ற தலைவர்கள் அதை நம்பவில்லை. சுபாஷ்போஸின் குடும்பத்திற்கு மேற்கண்ட இரு தலைவர்களும் அனுப்பிய தந்தியில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். "போசுக்கான இறுதிச் சடங்குகளைச் செய்ய வேண்டாம். அதற்குப் பதிலாகப் பிரார்த்தனை நடத்துங்கள்" என்று அந்தத் தந்தியில் குறிப்பிட்டார்கள். மகாத்மா காந்தி இச்செய்தியை நம்பவில்லை என்பதோடு "நேதாஜி உயிருடன் இருப்பதாகத் தான் நம்புவதாகவும்" பகிரங்கமாக அறிவித்தார். 1945ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டம்டம் சிறையிலிருந்தவர்களிடம் மகாத்மா பேசினார். அவர்களில் பெரும்பாலானோர் நேதாஜியின் சகாக்கள். அவர்கள் நடுவே பேசுமபோது மகாத்மா காந்தி பின்வருமாறு குறிப்பிட்டார். "நேதாஜி உயிருடன் இருப்பதாக நான் நம்புகிறேன்.

அவருடைய அஸ்தியை என்னிடம் யாராவது காட்டினால்கூட நான் அதை நம்பமாட்டேன். மகாத்மா காந்தி இவ்வாறு பேசியபோது அக்கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவரான சமர்குகா இதை கோஸ்லா கமிஷன் முன்னால் கூறியிருக்கிறார். நேதாஜி பற்றி அவர எழுதிய நூலிலும் குறிப்பிட்டுள்ளார். 1946 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் மேற்கு வங்காளத்திலுள்ள கண்டாய் என்ற இடத்தில நடைபெற்ற ஊழியர் கூட்டத்தில் மகாத்மா காந்தி பேசும்போது "சுபாஷ் போஸ் இன்னும் உயிருடன் இருப்பதாகவே நான் நம்புகிறேன் அவர் எங்கோ மறைந்து கொண்டிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

இந்திய தேசிய இராணுவத் தளபதிகளான ஷாநவாஸ்கான், செகால் ஆகிய இருவரும் செங்கோட்டையிலிருந்து விடுதலையானவுடன் மும்பை சென்று காந்திஜியைச் சந்தித்தனர். 1945 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் நாள் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது காந்தியடிகள் அவர்களிடம் பின்வருமாறு கூறினார். "நீங்கள் என்னதான் மாறுபட்ட செய்திகளைச் சொன்னாலும் என்னுடைய அந்தராத்மா நேதாஜி உயிருடன் இருப்பதாகத்தான் இன்னமும் நம்புகிறது." 1946 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 ஆம் நாள் வெளியான "ஹரிஜன்" இதழில் காந்தியடிகள் பின்வருமாறு எழுதினார். "இந்திய தேசிய இராணுவத்தின் வசீகர சக்தி நம்மீது முழுமையாகப் படிந்துள்ளது. இந்திய தேசிய இராணுவமும் நேதாஜியின் பெயரும் இணைபிரிக்க முடியாதபடி பின்னிப்பிணைந்துள்ளன. அவருடைய தேசபக்தி யாருக்கும் குறைந்ததல்ல. அவருடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் அவரின் தீரம் பளிச்சிட்டது.

இதற்குச் சிறிது காலத்திற்குப் பின்னர் வார்தாவில் கர்னல் ஹபியுர் ரஹ்மானைச் சந்தித்த பிறகு காந்திஜி ஒரு அறிக்கை வெளியிட்டார். "ஹபிபூர் ரஹ்மான் ஒரு இராணுவ வீரர் என்ற முறையில் என்னிடம் சிலவற்றைத் தெரிவித்துள்ளார். நேதாஜியைப் பற்றி ஹபிபூர் சொல்வதை நம்பும்படி இந்திய மக்களை வேண்டிக்கொள்கிறேன்." நேதாஜியின் மரணச் செய்தி பற்றிய விஷயத்தில் தான் நினைப்பதைக் காந்திஜி சொல்லாமல் ஹபிபூர் சொல்வதை நம்பும்படி வேண்டிக் கொண்டிருக்கிறார் என்பதுதான் குறிப்பிடத்தக்கதாகும்.

### கோப்பு எங்கே?

நேதாஜியின் மரணத்தைப்பற்றி வசாரிக்க அமைக்கப்பட்ட கோஸ்லா கமிஷன முன் பிரதமர் இந்திரா காந்தி அரசு தாக்கல் செய்த மனுவில் நேதாஜி பற்றிய செய்திகள் அடங்கிய பல ஆவணங்கள் காணாமல் போய் விட்டன அல்லது அழிக்கப்பட்டுவிட்டன என்று கூறப்பட்டது. இது சம்பந்தமாக ஆவணங்கள் அனைத்தும் ஜவஹர்லால் நேருவின் குடும்பத்திற்கு மிக நெருக்கமானவரும் நேருவின் தனிச செயலாளராகச் செயற்பட்டவருமான முகமது யூனூஸ் வசம் இருந்தன. இவர் நேருவின் குடும்பத்திற்கு மிக நெருக்கமானவர். நேருவின் மறைவுக்குப் பிறகு திருமதி இந்திரா காந்தியாலும் அவருக்குப் பிறகு ராஜீவ் காந்தியாலும் பல முக்கியமான பொறுப்புகள் அளிக்கப்பட்டு பணிபுரிந்தவர் இவர். ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது இவரின் புதல்வர் அமெரிக்காவில் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறையல் அடைக்கப்பட்டார். அமெரிக்க குடியரசுத் தலைவர் ரீகனுடன் பிரதமர் ராஜீவ் காந்தி நேரிடையான பேச்சுவார்த்தை நடத்தி யூனூ ஸின் மகனை விடுவிக்க ஏற்பாடு செய்தார். அந்த அளவுக்கு இவருக்கு நேரு குடும்பத்தில் செல்வாக்கு இருந்தது. நேதாஜி சம்பந்தமான இரகசிய ஆவணங்களை இவர் மறைத்திருப்பதற்கு ஆழமான காரணங்கள் இருக்க வேண்டும் என்று யூகிக்கப்படுகிறது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆவணங்கள் காணாமல் போனதாகச் சொல்லப்பட்டது வினோதமான ஒன்றாகும். இந்த கோப்புகள் நேதாஜி பற்றிய விசாரணைக் குழுகள் முன்னால் வைக்கப்பட்டிருந்தால் இது வரை வெளிவராத பல உண்மைகள் வெளிவந்திருக்கும். ஆனால, இந்தக் கோப்புகளைப் பராமரித்துவந்த முகமது யூனூசை தன்முன் ஆஜராகும்படி கோஸ்லா கமிசன் ஆணையிடவில்லை. எத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்தக் கோப்பு காணால் போயிற்று அல்லது அழிக்கப்பட்டது என்பது போன்ற விவரங்களை அவரிடமிருந்து அறிய விசாரணைக் கமிசன தவறி விட்டது.

இந்திய நாடாளுமன்றத்தில் நேதாஜியின் நெருங்கிய சகாவான எச்.வி.காமத் நேதாஜியன் மரணம் பற்றி விசாரிக்க வேண்டும என்ற கோரிக்கையை முதன் முதலாக எழுப்பினார. 1955 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் நாள் இக்கோரிக்கையை ஏற்க மறுத்துப் பிரதமர் நேரு பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார். "இதுபோன்ற விடயத்தில் திருப்திகரமான முறையில் ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றால் அது ஜப்பானிய அரசு மூலம்தான் செய்யப்பட வேண்டும். ஏனென்றால் இது சம்பந்தமான நிகழ்ச்சிகள் எல்லாம் அவர்கள் கட்டுப்பாட்டில்தான் நடந்துள்ளன. ஜப்பானிய அரசுமீது நாம் ஒரு விசாரணைக் குழுவை நிறுவ முடியாது. ஆனால் அவர்கள ஒரு விசாரணைக் குழுவை அமைத்தால் நாம் மகிழ்ச்சியுடன் நமது ஒத்துழைப்பை அளிகக முடியும். இந்த நிகழ்ச்சி சம்பந்தமான சாட்சிகள் பெரும்பாலும் ஜப்பானிய அரசு அதிகாரிகளாகவோ அந்த அரசுடன் சம்பந்தப்பட்டவர்களாகவோ இருக்கிறார்கள். எனவே இவ்விடயத்தில் ஜப்பானிய அரசுதான் முன் முயற்சி எடுக்க வேண்டும்."

இந்திய அரசு விசாரணைக் கமிசன் அமைக்க மறுத்தவுடன் கல்கத்தாவிலுள்ள முக்கியமானவர்கள் அனைவரும் ஒன்றுகூடி அதிகாரப்பூர்வமான விசாரணைக் கமிசன் ஒன்றை அமைப்பது என முடிவு செய்தார்கள். உலகப் புகழ்பெற்ற நீதிபதியான டாக்டர் இராதா வினோத்பால் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை வெளிநாடுகளுக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அதிகாரப்பூர்வமான விசாரணைக் குழு அமைக்கப்படும் செய்தியைக் கேட்ட பிரதமர் நேரு மிகுந்த பதட்டம் அடைந்தார். இம்முயற்சியை முறியடிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் அதிகாரப்பூர்வமான விசாரணைக்குழு அமைக்கப்படும் என 1956ஆம் ஆண்டில் அவர் அவசர அவசரமாக அறிவித்தார். இத்தகைய விசாரணைக் குழு அமைப்பதற்கு முதலில் மறுத்த அவர் திடீர் என்று இவ்வாறு அறிவித்தது எல்லோருக்கும் வியப்பை அளித்தது. இந்த அறிவிப்பு வெளியானதும் டாக்டர் இராதா வினோத்பால் அவர்களை இவ்விசாரணைக் கமிசனுக்குத் தலைவர் ஆக்கும்படி நாடெங்கும் கோரிக்கை எழுந்தது. யுத்தக் குற்றவாளிகள் விசாரணையில் நீதிபதியாக அவர் பணியாற்றியபோது அமெரிக்க-பிரிட்டிஷ் நதிபதிகளுக்கு மாறாக, அவர் தனது கருத்துக்களைத் துணிவாகத் தெரிவித்தார். இதன்மூலம் ஜப்பானிய அரசுத் தலைவர்கள் மற்றும் மக்கள ஆகியோரின் பெருமதிப்புக்கு ஆளானார்.

நேதாஜி விசாரணைக் குழுவுக்கு அவரைத் தலைவராக நியமிப்பதன் மூலம் ஜப்பானிய அரசு மற்றும் மக்களின் முழுமையான ஒத்துழைப்பு அவருக்குக் கிடைக்கும். போர்க் கால ஆவணங்களையும் அவரிடம் வழங்குவதற்கு ஜப்பானியர்கள் நம்பிக்கையுடன் முன்வருவார்கள் என்று அனைவரும் கருதினார்கள். ஆனால், பிரதமர் நேரு அவரை நியமிக்க மறுத்துவிட்டார். ஷாநவாஸ்கான் தலைமையில் மூவர் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நேரு நியமித்தார். முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியான எஸ்.என்.மொய்த்ரா, நேதாஜியின் சகோதரர் சுரேஷ் சந்திரபோஸ் ஆகிய இருவரையும் அக்குழுவின் உறுப்பினராக நியமித்தார்.

### சரத் சந்திரபோஸ் கருத்து

நேதாஜியின் மூத்த சகோதரரும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான சரத் சந்திரபோஸ் வமான விபத்தில் நேதாஜி மாண்டதாக கூறபபட்ட செய்தியை ஒருபோதும் நம்பவில்லை. பலமுறை அவர் தமது கருத்தைப் பகிரங்கமாக வெளியிட்டிருக்கிறார். 1946 ஆம் ஆண்டு சிறையிலிருந்து வெளியான பிறகு சரத் சந்திரபோஸ் ஐரோப்பாவில் ஒருமாத காலம் சுற்றுப்பயணம் செய்தார். நேதாஜியின் மனைவியான எமிலீயையும் மகள் அனிதாவையும் சந்திக்க அவர் சென்றார். தமது பயணத்தை முடித்துக்கொண்டு ஜூலை 22 ஆம் நாள் மும்பை வந்து சேர்ந்த அவர் யுனைடெட் பிரஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்.

"நேதாஜி இன்னும் உயிருடன் இருப்பதாக நான் நம்புகிறேன். விமான விபத்தில் அவர் இறந்ததாகச் சொல்லப்படுவது கட்டுக்கதையாகும். அந்தச் சமயத்தில் ஜப்பானிலிருந்த சுவிஸ் பெண்மணி ஒருவரை நான் அண்மையில் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. விமான விபத்துப் பற்றிய செய்தி கிடைத்ததும் அந்தப் பெண்மணி ஜப்பானில் உள்ள பல முக்கியமானவர்களுடன் தொடர்புகொண்டு அதைப பற்றி தீவிரமாக விசாரித்தபோது அந்த விமான வபத்து ஒரு கட்டுக்கதை என்பது தெரியவநததாக அந்தப் பெண்மணி உறுதியாக நம்புகிறார். என்னுடைய நண்பரும் டோக்கியோவில் நடைபெற்ற யுத்தக் குற்றவாளிகள் விசாரணை நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாகப் பணியாற்றியவருமான டாக்டர் இராதா வினோத்பால் என்னிடம் பின்வருமாறு கூறினார்:

"முக்கியமான அமெரிக்க, பிரிட்டன், ஜப்பான் செய்தியாளர்கள் பலரும் நேதாஜி விமான விபத்து பற்றிய செய்திகளை நம்பவில்லை என்று என்னிடம் கூறினார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். நேதாஜியின் கடைசி விமானப் பயணத்தின்போது அவருடனிருந்த ஹபிபுர் ரஹ்மான் வெள்ளையர்களால் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டுச் செங்கோட்டையில் அடைக்கப்பட்டார். அங்கிருந்து அவர் விடுதலையானவுடன் கல்கத்தாவிற்குச் சென்று சரத் சந்திரபோஸ் அவர்களைச் சந்தித்தார். அவருடைய வீட்டிலேயே பல மாதங்கள் தங்கியிருந்தார்.

அப்போது அவரை இந்திய தேசிய இராணுவத்தின் பல்வேறு தளபதிகளும் மற்றவர்களும் சந்தித்துப் பேசினார்கள். எல்லோரிடமும் விமான விபத்தில் நேதாஜி மாண்ட செய்தி பற்றி அவர் கூறினார். ஆனால் தன்னை குறுக்குக் கேள்வி கேட்க அவர் யாரையும் அனுமதிக்கவில்லை.

நேதாஜியின் தனி மருத்துவர்களான டாக்டர் கர்னல் ராஜ், டாக்டர் கஸ்லிவால் இருவரும் ஹபிபுர் ரஹ்மானைன் முழுமையாகச் சோதனை செய்தனர். "நேதாஜி சட்டை தீப்பற்றிக் கொண்டபோது தமது இரு கைகளைக்கொண்டு அதை அணைக்க முயற்சி செய்ததாக ஹபிபுர் ரஹ்மான் கூறியதைக் கேட்ட அவர்கள் "அப்படியானால் உங்களுடைய உள்ளங்கையில் எத்தகைய காயமும இல்லாதது ஏன்?" என்று கேட்டார்கள். அந்தக கேள்விக்கு ஹபிபுர் ரஹ்மான் எந்தவிதப் பதிலும் கூறவில்லை.

நேதாஜியின் அரசாங்கத்தின் சட்ட அமைச்சராக இருந்த ஏ.எம்.சர்க்கார் ஹபிர ரஹ்மானைச் சந்தித்துப் பேசிய பிறகு பார்வர்ட் பிளாக் பத்திரிக்கையில் எழுதிய கட்டுரையில் "ஹபிபுர் ரஹ்மான் மீதுள்ள தீக் காயங்களை நான் பரிசீலனை செய்தேன். எனக்குத் தெரிந்த மருத்துவ சட்ட அறிவினைக் கொண்டு ஆராய்ந்தபோது நான் சிரித்துக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. நேதாஜி மரணம் பற்றி ரஹ்மான் கூறுவதை உறுதிப்படுத்த வேறு சாட்சிகளும் கிடையாது" எனக் குறிப்பிட்டுள்ளார். ஹபிபுர் ரஹ்மான் கூறிய செய்தி பற்றிய தமது கருத்தைச் சரத் சந்திரபோஸ் தமது கடைசி காலத்தில் வெளியிட்டார்.

சரத் சந்திரபோஸ், தாம் இறப்பதற்கு 4 மாதங்களுக்கு முன்னால் கல்கத்தாவிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த "தி நேஷன்" என்னும் நாளிதழுக்கு ஒரு பேட்டி அளித்தார. 1949 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7 ஆம் நாள் வெளியான இப்பேட்டியில் "நேதாஜி உயிருடன் இருக்கிறார் எனத் தாம் நம்புவதாக" குறிப்பிட்டார். இப்பத்திரிக்கையின் சிறப்பு இதழில் மிகுந்த பரபரப்புடன் வெளியிடப்பட்ட இச்செய்தியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது. "மாசேதுங்கின் செஞ்சீனத்தில் நேதாஜி இன்னும் இருப்பதாக இந்திய அரசுக்குத் திட்டவட்டமாக தகவல் கிடைத்திருக்கிறது. பிரிட்டிஷ் அமெரிக்க அரசுகள் தைகோகூ விமான விபத்தில் நேதாஜி இறந்ததாக கூறப்பட்ட செய்தியை ஒருபோதும் நம்பவில்லை....

தொடரும்

-பழநெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய அபிவிருத்திகளினால் ஒரு தரப்பினருக்கே நன்மை

## முன்னாள் அமைச்சர் சம்பிக்க ஆதங்கம்



(கொழும்பு)

**இலங்கையில் மேற்கொள்ளப்படும் பாரிய அபிவிருத்திகள் ஒரு தரப்பினருக்கு மாத்திரமே நன்மையை தருகின்றன. இதனை சோஷலிசம் என்று கூறினால் அது பெரிய நகைச்சுவையாகவே இருக்கும் என்று முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று கருத்துரைத்த அவர், இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தரம் மற்றும் செலவு என்ற அடிப்படையில் பார்க்கும் போது பொருளாதாரத்துக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இந்தத்திட்டங்கள்நாட்டின்நலனை நோக்கி முன்னெடுக்கப்படவில்லை. புத்தளம் அனல் மின்சார நிலையம் மற்றும் அதிவேக பாதைகள் என்பன பெரும்பாலும் வெளிநாட்டு நிறுவனங்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

இவை வெளிநாட்டு பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் வறுமையான மக்களுக்கு நன்மைகள் கிடைக்களவில்லை என்றும் ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்த சிந்தனையின் மூலமாக கடன்சுமைதான் எஞ்சியுள்ளது

## ஐ.தே.க. சுட்டிக்காட்டு

மகிந்த சிந்தனை கொள்கைத் திடடத்தின் மூலம் தாங்கிக் கொள்ள முடியாத அளவு கடன் சுமை மட்டுமே எஞ்சியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியன் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தனி பண்டார தெரிவித்துள்ளார்.

மகிந்த சிந்தனைக் கொள்கைத்திட்டம் ஓர் ஆச்சரியமான எண்ணக்கருவாகவே ஆளும் கட்சியினர் பிரசாரம் செய்கின்றனர்.

எனினும் உண்மையிலேயே மகிந்த சிந்தனை காரணமாக ஆசியாவின் பிச்சைக்கார நாடாக இலங்கை மாறியுள்ளது.

அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகையின் அளவு எவ்வளவு என்றால் பிறந்த குழந்தைகள் மட்டுமன்றி பிறக்க இருக்கும் குழந்தைகளும் தலா நான்கு இலட்சம் ரூபா கடனாளியாகியுள்ளன.

பெற்றுக்கொண்டுள்ள கடனை அடைக்க வருடாந்த வருமானம் போதுமானதல்ல.

இவ்வாறு கடன் சுமை அதிகரித்தால் நாட்டை மீட்க முடியாத நிலைமை ஏற்படக்கூடும்.

இவை தொடர்பில் யதார்த்தமான தீமானம் ஒன்றை எடுக்க மகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்து ள்ளது.

யாருடைய பெயரையும் மேலே கொண்டு வரவோ யாருடைய பெயரையும் அழிக்கவோ நாம் விரும்பவில்லை.

எமது தாய்நாட்டை வெளிநாட்டு சக்திக ளிடமிருந்து மீட்டுக்கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கம் என சாந்தனி பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் உள்ள காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை தெரிவித்தார். (இ-5)

# கருணாவினது கொலைகள் தொடர்பில் முறையிட்டால் விசாரணைகள் நடக்கும்

(கொழும்பு)

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா, போர் இடம்பெற்ற காலத்தில் செய்ததாக கூறப்படும் கொலைகள் தொடர்பில் ஆதாரத்துடன் முறைப்பாடு செய்தால் விசாரணைகளுக்கு ஆதரவளிக்கப்படும் என தேசிய சுதந்திர முன்னணி அறிவித்துள்ளது.

கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பியசிறி விஜயநாயக்க நேற்று முன்தினம் பத்தரமுல்லவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கருணாவிற்கு எதிராக எவரேனும் முறைப்பாடு செய்து விசாரணை நடத்துமாறு நியாயமாக கோரினால் அதற்காக குரல் கொடுக்கத் தயார்.

சாட்சியங்களுடன் கருணாவின் குற்றச் செயல்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட கருணா போன்றவர்கள் சரியான பாதையில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

கருணா ஜனாதிபதியை ஹேக் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முயற்சிக்கவில்லை.

நாட்டை பிளவுபடுத்த வேண்டுமென கோரவில்லை.

எந்தவொரு நபரும் பிழை செய்தால் அதனை திருத்திக் கொள்ள சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

கருணா கொலை செய்திருந்தால் அதனை சாட்சியங்களுடன் நிரூபிக்க வேண்டும்.

வெறுமனே குற்றச்சாட்டுக்களை சுமத்துவதில் அர்த்தமில்லை.

குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களை தண்டிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜனாதிபதி மகிந்த தனது தேவைக்காக சர்வதேச சதித்திட்டம் பற்றி பேசுகிறார்

## சதித்திட்டத்தின் இலங்கை முகவர் ஜனாதிபதியே என்கிறார் துமிந்த

(கொழும்பு)

சர்வதேச சதித்திட்டத்தின் இலங்கை முகவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார.

பொது எதிர்க்கட்சியினர் சர்வதேச சதித்திட்டக்காரர்கள் என அரசாங்கத்தின் பேச்சாளர்கள் குற்றம் சுமத்தி வருவது குறித்து ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சதித்திட்டம் ஒன்று இருப்பதாக நினைத்து கொள்வோம். அப்படியான அந்த சதித்திட்டத்தின் இலங்கையில் இருக்கும் முகவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. அவர்தான் சந்தோசமாக நல்ல நேரம் பார்த்து ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் அறிவிப்பில் கையெழுத்திட்டார்.

ஜனாதிபதியே மக்கள் முன் வந்து ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வரப் போகிறது என்று கூறினார். இல்லை என்றால், ஜனாதிபதித் தேர்தலை நடத்த இன்னும் இரண்டு வருடங்கள் எஞ்சியிருக்கிறது. தற்போது பேசும் இந்த சர்வதேச சதித்திட்டம் அப்போது ஜனாதிபதிக்கு தெரியவில்லையா?

ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் ஜனாதிபதித் தேர்தலை கோரியதா? ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் கோரினரா? அலலது புலம்பெயர் தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலை கோரினார்களா?

நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ளாது நம்பிக்கையான ஒருவருக்கு நாட்டை ஒப்படைக்குமாறு ஜனாதிபதி கூறுகிறார். அவர் கூறுவது போன்று நாட்டை ஸ்திர மறற நிலைமைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கப்படுகிறது என்றால், அவர் தான் நம்பிக்கையை மீறியுள்ளார்.

தனக்கு அதிகாரத்தை பெறுவதற்காகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்துகிறார். இந்த தேவைக்காகவே சர்வதேச சதித்திட்டம் பற்றி பேசி வருகிறார் என்றும் துமிந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## அகத்தூய்மை

“எப்போதும் தூய்மையாக இருப்பது தான் நல்லது” என்று ஒருவர் சொன்னார்.

“நான் அப்படித்தான் சேர் இருக்கிறேன்! தினமும் மூன்று வேளை சோப்பு போட்டு குளிக்கின்றேன்” என்றார் இன்னொருவர்.

“உடல் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது சேர்! மனமும் நலமாக இருக்கவேண்டும்” என்றார்.

“மனதை சுத்தப்படுத்துவதற்கு என்ன சோப் போடலாம்?” என்று கேட்டார் இவர்.

“ஆன்மீகம்” என்ற சோப்புதான் அதற்கு பொருத்தமானது. ஆன்மாவை மேம்படுத்துவதற்கு ஒரு முயற்சிதான் ஆன்மீகம்.

அந்த முயற்சியை அடைய என்ன செய்ய வேண்டும்?

மனதினுள் அடைந்துகிடக்கும் வேண்டாத விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டும். முக்கியம் “பொறாமை”என்றவரை அதிரடியாக வெளி யேற்ற வேண்டும்.

இவர் நமது மனதினுள் குடியிருக்கும் வரைக்கும் நிம்மதியாக இருக்கமுடியாது.

ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரு சீடர்கள் இருந்தார்கள். இந்த இருவரும் ஆரம்பத் தில் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் தான் பழகிக் கொண்டிருந்தார்கள்.

காலம் கடந்த நிலையில் இந்த இருவரில் ஒருவரது மனதினுள் “பொறாமை” என்ற விருந் தாளி அமர்ந்துகொண்டது.

குருநாதரிடம் தான் நல்ல பெயர் பெறவேண் டும். தன் நண்பன் கெட்ட பெயர் கேட்கவேண்டும் என்றொரு நப்பாசை ஏற்பட்டது.

என்ன செய்யலாம் என யோசித்தான்?

ஒரு நாள் விடியற்காலையிலே எழுந்து நேராக குருவிடம் சென்று அவர் முன்னால் நின்று, “குருவே என்னைப் பாருங்கள். நான் எவ்வளவு விரைவாக எழுந்து குளித்து உங்களது வணக் கத்திற்காக காத்து நிற்கிறேன். ஆனால் இவன் இன்னமும் கண்விழிக்கவில்லை. தூங்கிக் கொண்டே விடியா முகத்துடன் இருக்கின் றான்”என்று கூறினான்.

குருநாதர் நிமிர்ந்து பார்த்து விட்டு கூறினார்.

“அப்படியா?” அப்படியென்றால் நீயும் அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே என மிகவும் பொறுமையாகச் சொன்னார்.

“என்ன இது – நான் எவ்வளவு தீவிரமான ஒரு விடயத்தை சொல்கின்றேன். நமது குருநாதர் மிகவும் பொறுமையாக இப்படிச் சொல்கிறாரே” என்று மனதினுள் நினைத்தான்.


ஆச்சரியமாக அவரைப் பார்த்தான். அதற்கு குருநாதர் “ஆமாமப்பா... நீயும் தூங்கிக் கொண்டு இருந்திருந்தால், மற்றவர்களை பற்றி குறை சொல்வதற்கு இங்கே முன்வந்திருக்கமாட்டாய் அதனால் தான் அப்படிச் சொன்னேன்?” என்று கூறினார்.

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் அர்த்தம் புரிந்தது.

“பொறாமை” என்ற விருந்தாளியை மனதிலே இருந்து விரட்டியடித்தான். இப்போது தனது மனம் சுத்தமாக இருப்பதை உணர்ந்து கொண்டான்.

*தென்கச்சி கோ-சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தான் அதிரடி

# முஷாரப் கொலை வழக்குடன் தொடர்புடைய நான்கு தீவிரவாதிகளுக்கு தூக்குத்தண்டனை

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை கொலை செய்யும் நோக்கில் நடந்த தாக்குதலில் தொடர்புடைய 4 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

பெஷாவரில் உள்ள பாடசாலையொன்றில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 132 குழந்தைகள் உட்பட 141 பேர் பலியாகினர். பாகிஸ்தானின் வடக்கு வஜிரிஸ்தானில் தங்கள் அமைப்பினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மீது இராணுவத்தினர் நடத்தும் தாக்குதலுக்கு பதிலடியாக 148 பேரை கொன்றதாக தெஹ்ரிக் இ தலிபான் தெரிவித்திருந்தது.

இதையடுத்து, தீவிரவாதிகளை முற்றிலும் அழிக்கும் வரை ஓயப் போவதில்லை என்று அறிவித்த பிரதமர் நவாஸ் ஷெரீப், அந்நாட்டில் மரண தண்டனைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதாக அறிவித்தார்.

### 2 பேருக்கு தூக்கு?

இதையடுத்து, தீவிரவாதிகள் அக்கீல் என்ற உஸ்மானுக்கும், அர்ஷத் மெஹ்மூத் என்ற மெஹர் பன்னுக்கும் பைசலாபாத் சிறை வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இராணுவத் தலைமையகத்தின் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் உஸ்மானும், பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை கொல்ல முயன்றது தொடர்பான வழக்கில் மெஹர் பன்னும் தூக்குத் தண்டனை பெற்றிருந்தனர்.

இவர்களைத் தவிர மேலும் 15 தீவிரவாதிகள் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியுள்ளதாக தகவல் வெளியானது.

### மேலும் 4 பேர்

இந்நிலையில், முன் னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை கொலை செய்ய முயன்ற வழக்கில் கைது செய்யப்பட்டிருந்த ஜுபேர் அகமது, ரஷீத் குரேஷி, குலாம் சர்வார் பட்டி, ரஷ்ய நாட்டவர் அக்லாக் அகமது ஆகியோருக்கு பைசலாபாத் சிறை வளாகத்தில் நேற்று முன்தினம் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்பு கைதிகளை அவர்களது குடும்பத்தினர் கடைசியாக சந்தித்துப் பேச அனுமதிக்கப்பட்டனர்.

முன்னதாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பைசலாபாத் நகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### இன்று 2 பேருக்கு தூக்கு?

அதே போன்று, கராச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ள தீவிரவாதிகள் அத்தவுல்லா என்ற காசிம், முகமது ஆஸம் என்ற ஷெரிப் ஆகியோருக்கு இன்று தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள கடந்த 2001ஆம் ஆண்டு நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் தொடர்புடையவர்கள்.

### 300 பேர் கைது?

தீவிரவாதிகளுக்கு எதிராக இஸ்லாமாபாத் முழுவதும் தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டது. வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள் குழு, அதிரடிப்படையினர் இணைந்து மோப்ப நாய்கள் உதவியுடன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர் என டான் பத்திரிகை வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் தங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ஆப்கான் நாட்டினரின குடியிருப்புகள், பஸ் நிலையங்கள உள்ளிட்ட இடங்களில் பொலிஸார் சோதனை நடத்தினர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் தீவிரவாதிகளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வெளிநாட்டினர் உட்பட 300 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




# 100 தீவிரவாதிகள் சுட்டுப்படுகொலை

**உலகத்தை படுகொலைகளால் பதற வைத்துக் கொண்டிருக்கும் படுபாதகர்களான ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் இஸ்லாமிய தேசத்தை உருவாக்கும் நோக்குடன் போரிட்டு வருகின்றனர். இந்நிலையில் சிரியாவிலிருந்து தப்பித்து வேறு நாடுகளுக்கு செல்ல முற்பட்ட 100 ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.**

ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் ஷியா பிரிவு அரசுகளை எதிர்த்து சன்னி பிரிவை சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தவிரவாதிகள் சண்டையிட்டு வருகின்றனர். முக்கிய வெற்றிகளைப் பெற்ற நிலையில், அமெரிக்க கூட்டுப்படைகள் தொடர்ந்து நடத்திய வான்தாக்குதல்கள், அவர்களுக்கு பெரும பின்னடைவை ஏற்படுத்தின. இதன் காரணமாக மேற்கொண்டு முன்னேற முடியாமல் அந்த இயக்கத்தினர் தத்தளித்து வருகின்றனர். இது அந்த இயக்கத்தில் உள்ள தீவிரவாதிகளுக்கு மனத்தளர்வையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ள தாக கூறப்படுகிறது.

### 100 தீவிரவாதிகள் கொலை

இந்த நிலையில், சிரியாவில் ஐ.எஸ்ஐ.எஸ் தீவிரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்த ரக்கா நகரில் உள்ள தளத் தில் இருந்து தப்பி, தங்கள் நாடுக ளுக்கு ஓட தயாரான 100 ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்த இயக்கத்தினராலேயே சுடடுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தகவலை சிரியாவில் ஐ.எஸ் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கும், ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் நிர்வாகத்துக்கும் எதிரான ஒருவ ர் உறுதி செயதார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை சேர்ந்தவர்கள்



கைதும் செய்யப்படுகின்றனர்

இது தொடர்பாக அவர் இங்கிலாந்தில் இருந்து வெளிவருகிற ஒரு பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். அந்த பேட்டியில் அவர், "ஐ.எஸ். ஐ.எஸ். தீவிர வாதிகளின் மன உறுதி குறைந்து விட்டது என்று கூற முடியாது. அவர்களின் மன உறுதி, மண்ணோடு மண்ணாக விழுந்து விட்டது என்று தான் கூற வேண்டும். உள்ளூர் போராளிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். அவர்கள் கடுமையாக உழைத்தும், உயிரிழந்து வருவதாக கருதுகின்றனர். வெளிநாட்டு போராளிகளைப் பொறுத்தமட்டில், சாகச செயல்களில் ஈடுபடுவதாக நினைத்தவர்களிடம், இப்போது அந்த உணர்வு வற்றிப்போய் விட்டது" என கூறி உள்ளார்.

ரக்காவில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் அந்த பத்திரிகை நிறுவனத்திடம் கூறும் போது, "ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவா திகள தங்களுக்கு என்று பொலிஸ் படையை உருவாக்கி உள்ளனர். களத்துக்கு வராத ஐ.எஸ.ஐ.எஸ். தீவிரவாதிகளை அந்த பொலிஸ் படையினர் கண்டறிந்து பிடித்து வருகின்றனர். ஐ.எஸ. ஐ.எஸ்.போராளிகளின் வீடுகளுக்கு சென்று, அவர்கள் சோதனை போட்டுள்ளனர். ஏராளமானவர்களை கைதும் செய்துளளனர்" என்றனர். இதுவரை 400 ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

### உறுதியான தகவல்

ரக்காவில் 100 ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்று குவிக கப்பட்டுள்ளது தொடர்பான செய்தியை 'நியூஸ் 24' செய்திசனலும்வெளியிட்டுள்ளது.

அதில், ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும், ஜனர்திபதி பஷார் அல் ஆசாத்தின் நிர்வாகத்துககும் எதிரான நபர், 'வெளிநாடுகளை சேர்ந்த ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிர வாதிகள் 100 பேர் சுட்டுக் கொல் லபபட்டுள்ளதை தான் சோதித்து உறுதி செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (இ-5)

### பயங்கரவாத ஊக்குவிப்பு நாடாக வடகொரியா

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளுக்கான அமெரிக்காவின் பட்டியலில் வடகொரியாவை மீண்டும் சேர்ப்பது பற்றி தனது நிர்வாகம் மறுபரிசீலனை செய்துவருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சோனி திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னணியில் வடகொரிய அரசு உள்ளது என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

சோனி நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட ஹேக்கிங், மிகப் பெரிய பாதிப்புகளை உண்டாக்கிய இணைய வழி அடாவடித்தனம் என சி என் என் தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி ஒபாமா வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்த மறுபரிசீலனை முடிந்தவுடன் உரிய பதில் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

ஆனால் தம் மீதான குற்றச்சாட்டு ஆதாரமற்ற வீண்பழி என வடகொரியா கூறுகிறது.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் இருபது ஆண்டு காலம் இருந்துவந்த வடகொரியாவை 2008 ஆம் ஆண்டில் அப்போதைய புஷ் நிர்வாகம் நீக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.(இ-5)

## தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதலில் ஆப்கானிஸ்தானில் 7 பொலிஸார் பலி!

வடக்கு ஆப்கானிஸ்தானில சோதனைச்சாவடி ஒன்றின் மீது தலிபான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் இரவு நடத்திய தாக்குதலில் 7 பொலிஸார் உயிரிழந்தனர்.

ஜாஸ்ஜான் மாகாணம், கஸ்தேபா மாவட்டத்தில் இநத சோதனைச் சாவடி உள்ளது. தலிபான் தாக்குதலில் மேலும் 5 பொலிஸாரும் காயம் அடைந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு கூடுதல் பொலிஸ் படை விரைந்தது. இதையடுத்து நடைபெற்ற மோதலில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தத் தாக்குதலுக்கு தலிபான்அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் கிழக்கில் உள்ள குணார் மாகாணத்தில் அரசுப்படைகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையிலான மோதல் ஒரு வாரத்துக்கும் மேல் நீடித்து வருவதாக மாகாண ஆளுநரின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார். இந்த மோதலில் இதுவரை 28 தீவிரவாதிகளும் 3 அப்பாவி மக்களும் கொல்லப்பட்டுள்ளதாக தெரிகிறது. இந்த எண்ணிக்கை மாறுபடலாம் என்றார் .

குணார் மாகாணத்தில் கடந்த சனிக்கிழமை இரவு மற்றொரு சம்பவமாக, நாரி மாவட்டத்தில் வீதியோர குண்டு வெடித்ததில் வாகனத்தில் சென்ற 2 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள வெளிநாட்டுப் படைகளில் பெரும்பாலானோர் வரும் 31ஆம் திகதிக்குள் வெளியேறுகின்றனர். இந்நிலையல் பாடசாலைகள், வெளிநாட்டி னர் விடுதிகள் என எளிய இலக்குகளை குறிவைத்து தலிபான்கள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# "குவாண்டனாமோ" முகாமைமூட நான் பல முயற்சிகளை எடுத்தேன்

### ஒபாமா தெரிவிப்பு

குவாண்டநாமோ தடுப்பு முகாமை மூடுவதற்கு தன்னால் முடிந்த அனைத்தை யும் தான் செய்ததாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அங்கு இன்னமும் நூற்றுக்கும் அதிகமான தீவிரவாத சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் மீது இன்னமும் குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படவில்லை.

இந்த தடுப்பு முகாம் தொடர்வது, தீவிரவாதிகளை தூண்டுவதற்கு காரணமாகவும், அமெரிக்க பெறுமானங்களுக்கு முரணானதாகவும் இருப்பதாகவும் அவர் கூறினார்.

கியூபாவில் இருக்கும் அந்த தடுப்பு முகாமுக்கான செலவு மிகவும் அதிகம் என்றும், அங்குள்ள ஒவ்வொரு கைதிக்கும் பல இலட்சக்கணக்கான டொலர்கள் செலவிடப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஒபாமா முதல் தடவையாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது இதனை மூடுவது என்பது அவரது ஒரு



உறுதி மொழியாக இருந்தது. ஆனால், அதற்கான நடைமுறைகள் மிகவும் மெதுவானதாகவே இருந்தது. கடந்த சனிக்கிழமையன்று 4 கைதிகள் அங்கிருந்து ஆப்கானுக்கு நாடு கடத்தப்பட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மைத்திரிபாலவின் மகனிடம் புலம்பெயர்ந்தவர்களின் பணம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

**எதிரணிக் கூட்டணிக்கு புலம்பெயர்ந்தவர்களிடம் இருந்து பணம் கிடைக்கிறது என்பதை பொது வேட்பாளர் மைத்திரிபாலசிறிசேன ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் தமது மனைவியின் தந்தைக்கு சுவிஸ் பிராங், அமெரிக்க டொலர்கள் என்பவற்றை கொடுத்துள்ளார்.இதனை இரண்டு நாட்களுக்கு முன்னர் மத்திய வங்கி அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.இந்த பணம் எவ்வாறு நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்ற தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் எனறும் அமைச்சர் நேற்று முன்தினம் மொனராகலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது தெரிவித்தார்.

எனவே இந்த பணம் தேர்தலுக்காக புலம்பெயர்ந்தவர்களால் வழங்கப்பட்டது என்பதை மைத்திரிபால ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று



விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்தார்.

மைத்திரிபாலவை ஜனாதிபதியாககுவதன் மூலம் வடக்கு, கிழக்கை இணைக்க புலம்பெயர்ந்தோர் முயற்சிப்பதாக வீரவன்ச மேலும் தெரிவித்தார். (இ-5)

# இளைஞர் விவகார அமைச்சின் அதிகாரிகளும் தேர்தல் களத்தில்



இளைஞர் விவகார அமைச்சின் அதிகாரிகள் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இளைஞர் விவகார அமைச்சின தென் மாகாண அதிகாரிகள் நேற்று மாத்தறையில் வீடு வீடாகச் சென்று ஜனாதிபதியின் சார்பில் பிரசாரம் செய்துள்ளனர்.

தேர்தல் சட்டங்களை முழுமையாக மீறி 50 பேருந்துகளில் இளைஞர் விவகார அமைச்சின் அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கவுள்ளனர்.

இந்த அரசாங்க அதிகாரிகளுக்கு அரசாங்கம் மேலதிக நேரக்கொடுப்பனவை வழங்கவுள்ளது. மாத்தறையில் ஆளும் கட்சியின் சகல தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் வீழ்ச்சியடைந்துளள காரணத்தால் இவ்வாறான ஓர் நிலைமை ஏற்படடுள்ளது. இந்த அதிகாரிகள் வீட்டுககு வந்தால் மகிந்த சிந்தனையின் ஊடாக அளிக்கப்பட்ட எந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது என மக்கள், அதிகாரிகளிடம்கேள்விஎழுப்ப வேணடும் என அவர் கோரியுளளார்.

மாத்தறையில் அமைந்துள்ள மங்கள சமரவீரவின் வீட்டில் நேற்று முன்தினம நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். (இ-5)

## இரு பெண்கள் உயிரிழப்பு

எம்பிலிப்பிட்டி - மஹபெலஸ்ஸ வீதியில் உள்ள பாலமொன்றை கடக்க முயன்ற இரண்டு பெண்கள் நீரில்அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.நேற்றிரவு மூனறு பெண்கள் பாலத்தை கடக்க முயன்றபோது மூவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டதுடன் அதில் இருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.காணமற போன பெண்ணைத் தேட விசேட நடவடிககைகள் எடுக்கபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர் (இ-5)

# இலங்கையின் குடிநீர் திட்டங்களுக்கும் சீன அரசாங்கம் உதவ முன்வந்துள்ளது

சீனா இலங்கையுடனான தனது உறவை மேம்படுத்தி வருகிறது. தென் இலங்கையில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுக விரிவாக்கத்துக்கு பல்லாயிரம் கோடி கடன் உதவி அளித்துள்ளது.

அதை தொடர்ந்து அங்கு முதல் கட்ட பணிகள் முடிந்து விட்டது. தற்போது 2ஆவது கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் இலங்கையில் குடிநீர் திட்ட பணிகளையும் சீனா மேற்கொண்டு வருகிறது.

அதற்காக ரூ.1375 கோடியை ஒதுக்கியுள்ளது. இப்பணியை சீன மெஷினரி என்ஜினீயரிங் கார்ப்பரேஷன் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இப்பணி முடிவடைந்தபின் நாள் ஒன்றுக்கு 54 ஆயிரம் கி.மீற்றர் தண்ணீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 1000 கி.மீற்றர் குழாய்களை பொருத்தும் நடவடிக்கைகளும் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. (இ-5)

## ஆளும் தரப்புக்கு தாவினார் சிவம்

ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலாளருமான எஸ் சதாசிவம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுககு ஆதரவு வழங்க தீர்மானிததுள்ளார். அத்துடன் அவரது இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியும் ஜனாதிபதியின் வெற்றிக்கு முழுமையான அர்ப்பணிப்பை வழங்குமெனவும எஸ்.சதாசிவம் தெரிவித்தார். (இ-5)




ராகுலன் பாலா




துஷா துஷா





சக்தி வேல்




மயூரதன் மயூரன்




சுரேஸ் குமார்




இரத்தினசபாபதி பாலராஜா

**இன்று ஒரு தகவல்**

உலகத்திலேயே மிகப்பெரிய தைரியம் எதுவென்றால், தைரியசாலி போல் நடிப்பது தான்.

எல்லா மொழிகளைக் காட்டிலும் கற்றுக் கொள்ள கடினமாயிருப்பது "மௌனம்" தான்.

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை தடுக்க மத்திய பா.ஜ.க.அரசு தீவிர முயற்சி!

### கருணாநிதி குற்றச்சாட்டு

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தைத் தடுக்க பல்வேறு முயற்சிகளில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளதாக தி.மு.க தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டினார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய், ஹிந்து மகாசபைத் தலைவர் மதன் மோகன் மாளவியா ஆகியோரின் பிறந்த நாளை நல்லாட்சி தினம் என்ற பெயரால் டிசெம்பர் 25 ஆம் திகதி கொண்டாட மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இது கிறிஸ்மஸ் நாளாகும். அந்த நாளில் சிபிஎஸ். பள்ளி கள் கட்டுரைப் போட்டிகள் நடத்த வேண்டும் என்று மத்திய அரசு கூறியுள்ளது. இதன் மூலம் கிறிஸ்மஸ் விடுமுறை நாளை மாணவ ர்கள் விழாவாகக் கொண்டாட முடியாத இக்கட்டான நிலையை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இது தொடர பாக ஏற்கனவே அறிக்கை விடுத்திருந்தேன். வேறு சில கட்சிகளும் கண்டித்தன.

அப்போது, கிறிஸ்மஸ் விடுமுறை தினத்தை ரத்து செய்யமாட்டோம் என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு விளக்கம் அளித்தது.

ஆனால், தற்போது டிசம்பர் 25ஆம் திகதியன்று, வாஜ்பாயின் பிறந்த நாள் விழா கொண்டாடப்படும என்றும், அன்றைய தினம் அலுவலர்கள், ஊழியர்கள் அனைவரும் அலுவலகங்களுக்கு வர வேண்டும் எனறும மத்திய அரசு நிரப்பந்தம் செயவதாகச் செய்திகள் வந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தா. (இ-5)




# வட மாநிலங்களில் 140 பேர் பனியால் பலி

**இந்தியாவின் வடமாநிலங்களில் தற்போது கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் இதுவரை 140 பேர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ள அதேவேளை கடந்த 11 வருடங்களில் இம் முறை அதிக பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன**

வட மாநிலங்களில் குளிர் காரணமாக மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். உத்தர பிரதேசத்தில் கடுமையான குளிர்காற்று வீசிவருதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குளிருக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 140 ஆக உயர்ந்து இருக்கிறது. டில்லியில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் நிலவி வருகிறது.

நேற்று முன்தினம் அதிகபட்ச வெப்பநிலை 15 டிகிரி செல்சியசாக இருந்தது. இது சாதாரண வெப்ப நிலையை விட 7 டிகிரி செல்சியஸ் குறைவாகும். குறைந்தபட்ச வெப்ப நிலை 2 டிகிரி குறைந்து 6.4 டிகிரி செல்சியசாக நிலவுகிறது. நகரின் பல்வேறு பகுதிகளிலும் பனி சூழ்ந்ததால், வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஞாயிறன்று வீசிய வாடைக்காற்றினாலும், கடும் குளிரினாலும் டில்லிவாசிகள் வீட்டிற்குள்ளேயே முடங்கிப்போயினர். கடந்த 11 ஆண்டுகளுக்குப் பின் நேற்று தான் முதன் முறையாக டில்லியில் மிகக் குறைநதபட்ச குளிர் பதிவானது. 2003 ஆம ஆண்டு கிறிஸ்துமஸ் நாளில் டில்லியில் அதிகபட்சமாக 14.2 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை நிலவியது. தற போது மீண்டும் கடும் குளிர் வாட்டிவதைக்கிறது. இந்திராபுரம், பரிதாபாத் பகுதியில் அதிகபட்ச வெப்ப நிலை 12.4 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையாக இருந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஜம்மு காஷ்மீரில் மிகக கடுமையான பனிக் காலம் தொடங்கியுள்ளது. 40 நாடகள் நீடிக்கும் இப்பனிககாலத்தில் வெப்பநிலை மைனஸ் டிகிரியில் செலவது வழக்கம். காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நேற்று முன்தினம் குறைந்தபட்ச வெப்பநிலை மைனஸ 1.8 டிகிரி செல்சியசாக இருந்தது. கடநத 20ஆம்திகதி இரவு மைனஸ் 4.4 டிகிரி செல்சியசாக நிலவியது. இமாச்சல பிரதேசத்தில் சுற்றுலா பகுதிகளான மணாலி, கேலாங் கலபாவிலமுறையே மைனஸ்3, 7, 16 டிகிரி செல்சியஸ்வெப்ப நிலை பதிவாகி உள்ளது. ஆறுகள், நீர்நிலைகள் உறையும் நிலையில் உள்ளன. இதனால், மக்களின் குடிநீர் தேவைமற்றும் தடை யில்லா மின்சாரத்தை வழங்குவதற்கான முன்னெச சரி க்கை நடவடிககைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது என் பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 225 கிறிஸ்தவர்கள் மீண்டும் இந்து மதத்துக்கு மாற்றம்

### விஸ்வ இந்து பரிஷத் அறிவிப்பு

(சென்னை)

குஜராத் மாநிலம், வல்சாத் மாவட்டத்தில் 225 கிறிஸ்தவ பழங்குடியின மக்களை மீண்டும் இந்து மதத்துக்கு மாற்றியுள்ளதாக விஸ்வ இந்து பரிஷத் (வி.எச்.பி.) அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வி.எச்.பி. வல்சாத் மாவட்ட தலைவர் நாது படேல் கூறும்போது, "அரணை கிராமத்தில் பழங்குடியினத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் 225 பேரை மீண்டும் இந்து மதத்துக்கு மாற்றியுள்ளோம். இவர்கள் அனைவரும் தங்களின் சொந்த விருப்பத்தின் பேரில்தான் இந்து மதத்துக்கு மாறியுள்ளனர். இவர்கள் பூர்வீகத்தில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த மதமாற்ற நிகழ்ச்சியையொட்டி மிகப்பெரிய யாகத்தை நடத்தியிருந்தோம். இதில் கலந்து கொண்ட 225 பேருக்கும் பகவத் கீதை புத்தகத்தை அளித்து முறைப்படி இந்து மதத்துக்கு மாற்றியுள்ளோம்" என்றார்.

#### மதம் மாற்றும் பணி தொடரும்

உத்தரப் பிரதேசத்தில் கட்டாய மதமாற்றத்தில் சில இந்துத்வா அமைப்புகள் ஈடுபடுவதை கண்டித்து நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி விளக்க அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் மதமாற்றம் செய்யும பணி தொடரும் என்று ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கத்தின் (ஆர்.எஸ்.எஸ்.) தலைவர் மோகன் பாகவத் கூறியுள்ளார்.

மோகன் பாகவத் கொல்கத்தாவில் நிகழ்ச்சியொன்றில் பேசியதாவது:

இந்தியா ஒரு இந்து தேசம். கடந்த காலங்களில் ஏராளமான இந்துக்கள் வேறு மதத்தை தழுவுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களாக விரும்பி மதம் மாறவில்லை. அவர்களை பிற மதத்தினர் ஏமாற்றி மதம் மாற்றிவிட்டனர். வழிதவறிச் சென்றுவிட்ட அவர்களை மீண்டும் சரியான பாதைக்கு நாங்கள் அழைத்து வருவோம் எனத் தெரிவித்தார். (இ-5)

# ஆர்.எஸ்.எஸின் பேச்சு ஆபத்தானது

### ராமதாஸ் கண்டனம்

மத மாற்றம் குறித்து ஆர்.எஸ்.எஸ்.பாரதிய ஜனதா உள்ளிட்ட அமைப்புகளின் பேச்சும், செயல்களும் சகோதர உணர்வுடன் வாழும மக்களிடையே சண்டை உண ர்வை ஏற்படுத்திவிடுமோ? என்ற அச்சத்தை ஏற்படுத்துகி ன்றன என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "கொல்கத்தாவில் விஸ்வ இந்து பரிசத் அமைப்பு நடத்திய பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன் பாகவத், "இந்தியா என்பது இந்துக்களின் தேசம். கடந்த காலங்களில் இழந்ததை இப்போது மீட்போம். கடந்த காலங்களில மதமாற்றம் செய்யப்பட் டோரை கட்டாயமாக மறு மதமாற்றம் செய்வோம். அதன்பின் இந்துக் களை எவரும் மதமாற்றம் செய்யா மல தடுக்க கட்டாய மத மாற்றத் தடை சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவோம்" எனக் கூறியுள்ளார்.


சென்னை, கொச்சி ஆகிய நகரங்களில் செய்தியாளர்களிடம் பேசிய பாரதிய ஜனதாக் கட்சி தலைவர் அமீத் ஷா, "தேசிய அளவில் கட்டாய மதமாற்றத்தை சட்டத்தைக் கொண்டு வர பாரதிய ஜனதாக் கட்சி தயாராக உள்ளது. இதற்கு மற்ற கட்சிகளும ஒததுழைக்க வேண்டும்" என வலியுறுத்தியு ள்ளார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர பாகவத் பேசிய சில நிமிடங்களில் குஜராத் மாநிலம் வல்சாத் மாவட்டத்தில் 500க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்களை கிறிஸ்தவ மதத்தில் இருந்து இந்து மதத்திற்கு ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் மாற்றியிருக்கிறார்கள். அண்டை மாநிலமான கேரளத்தில் 30 கிறிஸ்தவர்களை மத மாற்றம் செய்திருப்பதாகவும் வஸ்வ இநது பரிசத அமைப்பு அறிவித் துள்ளது.

இனிவரும் நாட்களில் இந்தியா முழுவதும் பெருமளவிலான பிற மதத்தினரை இந்து மதத்திற்கு மாற்றவும் ஆர்.எஸ்.எஸ்ஸின் துணை அமைப்புகள் திட்டமிட்டிருக்கின்றன என ராமதாஸ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)




# பாரதத்தில் மீண்டும் கூட்டணி அரசாங்கம் அமைய வாய்ப்பு

### அத்வானி கருத்து



பா.ஜ.க.மூத்த தலைவர் எல்.கே. அத்வானி, மத்திய அரசில் மீண்டும் கூட்டணி அரசியல் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி ஒன்றுக்கு அத்வானி பேட்டி அளித்தார். அப்போது, நம் நாட்டில் கூட்டணி சகாப்தம் முடிந்து விட்டதாகக் கருதுகிறீர்களா? என்று செய்தியாளர் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் அவ்வாறு கூறமாட்டேன. இந்தியா போன்ற மாறுபட்ட தன்மைகள் கொண்ட நாட்டில் மீண்டும் கூட்டணி அரசு அமைய வாய்ப்புள்ளது.

இந்தியா போன்றதொரு நாட்டில ஒருவர் அனைத்துச் சூழ்நிலைகளையும் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, ஒரு கட்சி அரசு இருந்தது. எனினும் அந்த நிலை நீடிக்கவில்லை. வாஜ்பாய் அரசு கூட தனியொரு கட்சி தலைமையிலான அரசு அல்ல என்று அத்வானி கூறினார். மேலும், "வாஜ்பாய் போன்ற தேசபக்தருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும்" என்று அத்வானி கூறியுள்ளார்.

மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பா.ஜ.க.வின் பெரும பானமை அரசு நடைபெற்று வரும் நிலையில் அத்வானி இவ்வாறு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2014-14.01.2015



**சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்! எதிலும் வெற்றி பெறுவோம என்ற நம்பிக்கையை எப்பொழுதும் கொண்டிருக்கும் மேட ராசி அன்பர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத்தின் தொடக்க நாளிலேயே சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. 2-வருடங்களுக்கு ஒருமுறை பெயர்ச்சியாகும் இந்தீப் பெயர்ச்சி, உங்கள் ராசிக்கு எட்டாமிடத்திற்கு அடியெடுத்து வைத்திருக்கிறது. 'அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி' என்று சொல்வார்கள். ஆனால், அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

ஒவ்வொருவர் ஜாதகத்திலும் சனி இருக்குமிடம், பார்க்குமிடம், பாதசார விபரம், அதோடு இணைந்திருக்கும் கிரகம் அனைத்தையும் சுயஜாதக அடிப்படையில் தெரிந்துகொள்வதே நல்லது. பொதுவாக 8 இல் சனி சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் கூடுதலாக இருக்கும். எதிர்பார்த்த மாற்றங்கள் கிடைக்கும். ஆரோக்கிய தொல்லை அலைக்கழிக்கலாம்.

இருப்பினும் நீங்கள் மிகுந்த பாக்கியசாலிகள். காரணம் சனி எட்டில் அடியெடுத்து வைக்கும் போது, அதிசாரமாக சிம்மத்தில் சஞ்சரித்து வந்த குரு, டிசம்பர் 22 ஆம் திகதி அன்று கடக ராசிக்கு வக்ரமாகிப் பின்னோக்கிச் செல்கிறார். கடகராசி குருவிற்கு உச்ச வீடு. எனவே, மிக மிக பலம்பெற்ற குருவின் பார்வை அஷ்டமத்துச் சனியின் மீது பதிகிறது. அதனால் சனியின் கடுமை குறையும். விரயத்தை ஏற்படுத்த வேண்டிய சனி சுப விரயத்தை உருவாக்கும்.

வீட்டில் மற்றும் வெளிவட்டாரத்தில் பிரச்சினைகளைக் கொடுக்க வேண்டிய சனி, அர்ச்சனைகள் செய்து வழிபடுவதன் மூலம் அனுகூலத்தைக் கொடுக்கும். இடமாற்றம் கொடுக்க வேண்டிய சனி நீண்டதூர மாற்றமாக இல்லாமல், நினைத்த இடத்திற்கே மாற்றத்தை வரவழைத்துக் கொடுப்பார். தொழில் சீராக நடைபெறும்.

அஷ்டம ஸ்தானம் தன்னில்
அடியெடுத்து வைத்தபோதும்,
வெற்றிகள் குவிவதற்கும்,
விதிநிலை மாறுதற்கும்,
கெட்டவை அகல்வதற்கும்
கேட்டவை கிடைப்பதற்கும்
சத்திய சீலனாகும்
சனியினைத் தொழுவோம்
நாமே!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. சனியை வழிபட்டால் சந்தோஷம் கிடைக்கும். என்ன இருந்தாலும் ஆரோக்கியத்தில் மட்டும் தங்களுக்கோ, தங்கள் குடும்பத்தைச்சேர்ந்தவர்களுக்கோ, அடிக்கடி தொல்லைகளும், விரயங்களும் ஏற்படும். குருபார்வையால் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர்.




**புத-சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

டிசம்பர் 28 ஆம் திகதி புதனும், 30 ஆம் திகதி சுக்ரனும் மகரத்தில் சஞ்சரிக்கப் போகிறார்கள். தனாதிபதி சுக்ரனும், சகாய ஸ்தானாதிபதி புதனும், தொழில் ஸ்தானத்தில் உச்சம் பெற்ற ராசிநாதன் செவ்வாயுடன் இணையும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பூமியோகம் உண்டாகும். தொழில ரீதியாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். வளர்ச்சிப் பாதைக்கு வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்ப செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 1 ஆம் திகதி குடும்பத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். இம் மாதம் சனியின் சன்னிதியில் வழிபாடு செய்யுங்கள். சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

அஷ்டமத்துச் சனி அடியெடுத்து வைக்கும் இம்மாதத்தில், எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது. குடும்பச்சுமை கூடும். மருத்துவ ஆலோசனைகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

கணவன்- மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் விருப்பங்கள் நிறைவேறும். குடும்பப் பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்வதைத் தவிர்க்கவும். விரயங்களிலிருந்து தப்பிக்க அத்தியாவசியப் பொருட்களை வாங்கலாம். விஷ்ணு வழிபாடு வேதனை தீர்க்கும்.

## சுபகாரியப்பேச்சுக்கள் நல்ல முடிபிற்கு வரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டும் நேரம்! எந்த வேலை செய்தாலும் அதில் மனதை ஐக்கியப்படுத்திச் செய்யும் இடப ராசி அன்பர்களே!**

மார்கழி மாதப் பலன்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இதுவரை உங்கள் ராசியில் ஆறாம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான், மாதத்தின் தொடக்க நாளிலேயே சப்தம ஸ்தானத்தில் கண்டகச் சனியாக சஞ்சரிக்கப் போகிறார். இந்த மாபெரும் சனிப்பெயர்ச்சி நல்ல மாற்றங்களை உங்களுக்கு வழங்கப் போகிறது.

கண்டகச்சனிஎன்றதும்கொண்டாட்டங்கள் குறைந்து விடுமோ? குழப்பங்கள் அதிகரித்து விடுமோ? என்று நீங்கள் நினைக்க வேண்டாம். சோதனைக்கு உட்படுத்த வைக்கும் சனிபகவானே, சாதனைகள் நிகழ்த்தவும் வைப்பார் என்பது சாஸ்திர நியதி. உங்களைப் பொறுத்தவரை ராசிநாதனாக விளங்குபவர் சுக்ரன். அவர் அள்ளிக் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றவர். வெள்ளிக் கிழமைக்கும் அதிபதியானவர். வியக்கும் வாழ்க்கையையும் நமக்குத் தருபவர்.

அப்படிப்பட்ட சுக்ரனுக்கு நட்பு கிரகமாக விளங்குபவர் சனிபகவான். எனவே, அவருக்கு உறுதுணையாக இருப்பாரே தவிர பகையாக மாற மாட்டார். எனவே கண்டகச் சனி காலத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். அதே நேரத்தில் சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால், ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகள் வந்து கொண்டேயிருக்கும். இருப்பினும் கடகத்தில் சஞ்சரிக்கப் போகும் குருவின் பார்வை, சனியின் மீது பதியப் போவதால் பயப்படத் தேவையில்லை.

சப்தம ஸ்தானம் தன்னில்
சனி எனும் கிரகம் வந்தால்
எப்போதும் அதனின் பார்வை
இயல்பாகப் பதியும் அன்றோ!
அப்படி பார்க்கும் மந்தன்
அனுதினம் நன்மை செய்ய
ஒப்பிலா அனுமன் தாளை
உள்ளத்தில் நினைத்துக் கொள்
வீர்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. எனவே அனுமன் வழிபாடு உகந்தது. ஏழாமிடத்துச் சனி இடமாற்றம் கொடுக்கும் என்று சொல்வார்கள். எனவே இடமாற்றம், வீடுமாற்றம், ஊர்மாற்றம், நாடு மாற்றம் என்று, ஏதேனும் ஒரு மாற்றம் பெயர்ச்சிக்குப் பின்னால் உங்களுக்கு வந்துசேரும். அந்த மாற்றங்கள் அத்தியாவசிய மாற்றங்களாக இருந்தால் சுயஜாதக [illegible]

**புத, சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

டிசம்பர் 28 ஆம் திகதி புதனும், 30 ஆம் திகதி சுக்ரனும் மகர ராசியில் சஞ்சரிக்கப் போகிறார்கள். ராசிநாதன் சுக்ரனும் தனாதிபதி புதனும் இணைந்து 9 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். வாகன யோகம் கிட்டும். பயணத்தால் பலன் கிடைக்கும். தூர தேசத்திலிருந்து வரும் தொலைபேசி அழைப்புகள் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும். விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.




மின்சாதனப் பொருட்கள் வாங்குதல், ஆடை, ஆபரண சேர்க்கையில் ஆர்வம் காட்டுதல், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடிய வழிவகுக்கும் சூழ்நிலைகளை இக்கால கிரக நிலைகள் செய்யும். அதே நேரத்தில் புத, சுக்ர யோகம் செயறபடுவதால் பொருளாதார நிலை உயரும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

2015 ஜனவரி 1 ஆம் திகதி கும்ப ராசிக்குச் செவ்வாய் செல்கிறார். இதுவரை மகரத்தில் உச்சம் பெற்றிருந்த செவ்வாய், இப்போது தொழில் ஸ்தானத்திற்குச் செல்வதால் தொழில வளம் மேலோங்கும். வாழ்க்கைத் துணைக்கு உத்தியோகம் கிடைத்து வருமானம் இருமடங்காக வந்து சேரும். கடல்பயண வாய்ப்புகள் கைகூடும். அதே நேரத்தில் செவ்வாய் விரயாதிபதியாகவும் விளங்குவதால், செய்தொழிலில் பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நிறைவேறாமல் போகலாம். நண்பர்களால் விரயம் உண்டு. இம் மாதம் பிரதோஷ காலத்தில் நந்தியை வழிபட்டு நலம் காணுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் சப்தம ஸ்தானத்தில் சனி உலா வரப் போவதால் எதிலும் விழிப்புணர்ச்சியோடு செயறபடுவது நல்லது. வாங்கல், கொடுக்கல்களில் விரயங்கள் ஏற்படலாம். வீடு மாற்றச் சிந்தனை மேலோங்கும். குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி கிடைககும். உங்கள் பெயரில் வாங்கிய சொத்துக்களை விற்க நேரிட்டாலும் மண்டும்வாங்கும்அமைப்பு உண்டு. விரயங்களிலிருந்து விடுபட சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டையும், ஆதியந்தப் பிரபு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

## இம் மாதம் உங்களுக்கு நல்ல மாற்றங்கள் நிகழும்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தொடுத்து விட்ட அம்பு; சொல்லி விட்ட வார்த்தை திரும்ப வராது.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மகனே! மாவை சேனாதி வார்த்தை பக்குவம் ராசா!

**யாகாவராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

என்பது வள்ளுவர் உரைக்கும் அறம்.

இந்த உலகில் எந்த அறத்தைக் காப்பாற்றா விட்டாலும் நாவென்னும் அறத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது குறள் தரும் பொருள்.

நா காத்தல் என்ற வள்ளுவ அறம் எங்கும் எதிலும் பொருந்தக் கூடியது. எனவே அறத்தைக் காப்பாற்றுவதில் பின்னிற்றல் ஆகாது.

இந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கும் என்பது பற்றி விரைவில் தெரிவிக்கப்படும் என நீங்கள் கூறியதாக ஒரு தகவல்.

தகவல் அறிந்து அதிர்ச்சியடைந்தோம். தேர்தல் என்றால் யாரையாவது ஒருவரை ஆதரிக்க வேண்டும் என்பது நியதியன்று. எங்களுக்குப் பொருத்தமுடையது எனக் கருதும் சந்தர்ப்பத்தில் யாரை ஆதரித்தல் என்பதைப் பகிரங்கப்படுத்த முடியும்.

ஆகையால் சில இடங்களில் நடுவு நிலைமை என்ற முடிவை எடுப்பது மகா புத்திசாலித்தனமாக இருக்கும். அதிலும் தமிழர்களாகிய நாங்கள் தேர்தலில் யாரையாவது ஆதரிக்கப் போனால் அது இரண்டு விளைவுகளை ஏற்படுத்தும்.

அதில் ஒன்று, தமிழர்களின் ஆதரவை வைத்துக் கொண்டு மறுதரப்பால் எதிரான பிரசாரம் மேற்கொள்ளப்படும். இதனால் தமிழர்கள் ஆதரித்தால் தோல்வி என்ற நிலைமை ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

இரண்டாவது விடயம் தமிழர்களாகிய நாங்கள் சிங்கள வேட்பாளர் ஒருவரை ஆதரிக்கும் போது அவர் ஒரு நியாயமானவர் என்பது போல பொருள் கொள்ளப்படும். எனவே, இந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்ல வேண்டியதெல்லாம் சிங்கள மக்கள் யாரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்கிறார்களோ அவரோடு நாங்கள் எங்கள் பிரச்சினை குறித்துப் பேசுவோம் என்பதாகும்.

அதேநேரம், தமிழ் மக்கள் எங்களை விடப் புத்திசாலிகள். ஆகையால் அவர்கள் நிலைமைக்கேற்றவாறு யாருக்கு வாக்களிப்பதென்ற தீர்மானத்தை மேற்கொள்வர்.

அவர்கள் எடுக்கக்கூடிய சரியான தீர்மானத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலையிடாது என்று கூறிவிட்டு அமைதியாக இருப்பதை விட கூட்டமைப்பு செய்யக்கூடிய புத்திசாலித்தனம் வேறு எதுவுமாக இருக்காது.

ஆக, நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

இந்த நாட்டின் சிறுபான்மை இனமாக இருக்கக்கூடிய முஸ்லிம் மக்களின் நிலைமையும் தமிழ் மக்களின் நிலைப்பாடும் ஒன்றல்ல. முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆளும் கட்சியோடு நிற்பார்கள். எதிர்கட்சியோடும் சேர்வார்கள். அவ்வாறு அவர்கள் சேர்வதும் விலகுவதும் இந்த நாட்டில் பழக்கப்பட்ட விடயம்.

இவ்வாறு முஸ்லிம் மக்களின் அரசியல் கட்சிகள் அடிக்கடி கட்சி தாவுவதையிட்டு சிங்களக்கட்சிகள் எதிர்ப்பிரசாரம் செய்யமுடியாது. அவ்வாறான பிரசாரத்தை நியாயப்படுத்தவும் முடியாது.

ஆனால் தமிழர்களாகிய எமது நிலை அதுவன்று. நாங்கள் ஒரு வேட்பாளரை ஆதரித்தால், மறுதரப்பு நாக்கூசாமல் புலிகள் மீண்டும் வருவர் என்று சொல்லும். இந்தப் பிரசாரம் தென்பகுதியில் வாக்காளர்களின் தீர்மானங்களில் கனதியான மாற்றங்களை ஏற்படுத்தி விடும்.

ஆகையால் மகனே! மாவை சேனாதி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கும் என்று வாய் திறக்காமல் இருப்பதே மகா புத்திசாலித்தனம். இதை விடுத்து வாய் திறந்து வார்த்தையைக் கொட்டி விட்டால் எல்லாம் போச்சு.

# வெள்ள நிவாரணம் தொடர்பாக இந்து மாமன்றத்தின் வேண்டுகோள்

நாடுமுழுவதும் பரவலாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக அநேக இடங்களில் மக்கள் தமது சொந்த இருப்பிடத்தைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். முக்கியமாக வடகிழக்கு மாகாணங்களில் தாழ் நிலப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டியுள்ளதால் அகில இலங்கை இந்து மாமன்றம் பின்வரும் இடங்களில் நிதி மற்றும் உலர் உணவு சேகரிப்பு நிலையங்களை ஒழுங்கு செய்துள்ளது.:-

01. சரஸ்வதி மண்டபம்
75, லோறன்ஸ் வீதி,
பம்பலப்பிட்டி.
தொலைபேசி:- 011-2585975

02. விவேகானந்த சபை
விவேகானந்த வீதி,
கொட்டாஞ்சேனை.
தொலைபேசி:- 011-2422646

03. அகில இலங்கை இந்து மாமன்றம்
91/5, சேர் சிற்றம்பலம்
ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 02
தொலைபேசி:- 011-2434990

எனவே நிதி மற்றும் உலர் உணவுகளை (அரிசி, பருப்பு, சீனி, பால்மா வகைகள்) 23.12.2014 தொடக்கம் 28.12.2014 வரை வழங்கி உதவுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்கொடையைப் பணமாக செலுத்துதல் விரும்பத்தக்கது அவ்வாறாயின் அவற்றிற்குரிய பொருட்களை நாம் கொள்வனவு செய்து வழங்க இலகுவாக இருக்கும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை பெறவிரும்புவோர் அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர்

மு. கதிர்காமநாதன் - (077-765 6070) மற்றும் சமூகநலன் குழுத் தலைவர், சி. தனபாலா – (077-76 31787) ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாம் என இந்து மாமன்றம் அறிவித்துள்ளது. (இ-5)

# இராணுவ உதவியாளர்களின் வாக்களிப்பை சிவில் உத்தியோகத்தர்களே கண்காணிப்பராம்

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு உதவியாளர்களாக சேர்க்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் தபால் மூலமாக வாக்களிக்கும் போது சிவில் உத்தியோகத்தர்களே கண்காணிப்பாளர்களாக பணியாற்றுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களுக்கான வாக்களிப்பு இன்று செவ்வாய்க் கிழமையும், நாளை புதன்கிழமையும் இடம்பெறுகின்றன.

இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரம் இராணுவ உதவியாளர்கள் தகுதிபெற்றனர்.

ஆனால் இவர்களின் தபால் மூல வாக்களிப்பின் போது முறைகேடுகள் இடம்பெறலாம் எனக் குற்றஞ் சாட்டப்பட்டது. இதனையடுத்தே இவர்களுக்கான தேர்தல் கண்காணிப்பின் போது 10 சிவில் உத்தியோகத்தர்கள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டது. (இ-5)

# திருவுடையாள் மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் தெற்கு மேற்கு பிரதேச கலாசார பேரவை நடத்தும் கலை இலக்கிய விழாவும் திருவுடையாள் -05 மலர் வெளியீடும் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ-60)

# ஏல விற்பனை

மல்லாகம் மாவட்ட நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்களும் துவிச்சக்கர வண்டிகளும் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக் கிழமை காலை 10.00மணிக்கு ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி பொருட்களை அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் எனவும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் எனவும் பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையினை கொண்டு வரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-[illegible])

# பெண்ணின் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பணிபுரியும் சிற்றூழியர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த நிஷாந்தினி (வயது 24) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகி உள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் சிற்றூழியராக கடமையாற்றி வரும் இவர், நேற்றுக் காலை கடமைக்காக வீட்டில் இருந்து புறப்பட்டுள்ளார்.

இவ்வாறு சென்றவரை யாழ். நகர்ப் பகுதியில் வைத்து அவரது கணவர் வாளால் சரமாரியாக வெட்டியுள்ளார்.

படுகாயமடைந்தவர் உடனடியாக தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குடும்பத்தகராற்றின் காரணமாகவே வாள்வெட்டு ஏற்பட்டதாகவும் அப்பெண்ணின் கணவனே வாளால் வெட்டிக்காயப்படுத்தியுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தின் வருடாந்த மகரஜோதி மண்டல விரத மகர மகோற்சவம் பெருவிழாவின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கும் தீர்த்தத்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10மணிக்கும் இடம்பெறவுள்ளது. (இ-5)

# மணல் கடத்திய சந்தேக நபர் பொலிஸாரால் நேற்றுக் கைது

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் பகுதியிலிருந்து உழவு இயந்திரம் மூலம் சட்ட விரோதமான முறையில் மணல் கடத்தி சென்ற சந்தேகநபர் ஒருவரை கொடிகாமம் பகுதியில் வைத்து நேற்று காலை கைது செய்ததாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் எழுதுமட்டுவாழில் இருந்து சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து அதனை கொடிகாமம் பகுதிக்கு கொண்டு செல்லும் போதே கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைகலப்பு சம்பவமொன்றுடன் தொடர்புடைய திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியை சேர்ந்த மூன்று பெண்களுக்கு பிடியாணை பிறப்பித்து யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

திருநெல்வேலி பகுதியில் இடம் பெற்ற கைகலப்பு சம்பவம் ஒன்றுடன் இந்த மூன்று பெண்களும் தொடர்புபட்ட நிலையில், அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த வேளை, மூன்று தடவைகள் அவர்கள் ஆஜராகியிருக்கவில்லை.

இதனையடுத்து, அந்த பெண்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு கோப்பாய் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (இ-29)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## கடவுளுக்கு இதுவே மகிழ்ச்சி



- அறிவோடு செயல்படும் போது தான் பிழைகளை அகற்ற முடியும். இதையே அறிவியலும் ஏற்றுக் கொள்கிறது.
- உன்னை நீயே வெறுப்பது கூடாது. வெறுப்பினால் அழிவுக்குரிய வாசல் திறந்து விடப்படுகிறது.
- தாய், தந்தையரை ஒருவன் மகிழ்ச்சிப்படுத்தி விட்டால் கடவுளே மகிழ்ச்சியில் திளைக்கிறார்.
- அன்பின் அடிப்படையில் செய்யப்படும் எந்த ஒரு செயலின் முடிவும் ஆனந்தத்தில் நிறைவு பெறும்.
- பெற்றுக் கொள்வதில் எந்த பெருமையும் இல்லை. கொடுத்து மகிழ்பவனே பேறு பெற்றவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிபா உலகக்கிண்ண காற்பந்து ரியல் மாட்ரிட் அணி சம்பியன்



கழகங்களுக்கிடையிலான பிபா உலகக்கிண்ண காற்பந்து தொடரில் ரியல் மாட்ரிட் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இப் போட்டித்தொடரின் இறுதிப்போட்டியில் ஸ்பெயினின் ரியல் மாட்ரிட் அணி, ஆர்ஜென்டினாவின் சான்லாரன்சோ அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய ரியல் மாட்ரிட் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மாட்ரிட் அணி சார்பில் ரமோஸ் (37வது நிமிடம்), பாலே (51வது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர்.

இதன்மூலம் ரியல் மாட்ரிட் அணி, கழக அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண தொடரில் முதன் முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

தவிர, இத்தொடரில் கிண்ணம் வென்ற 9 ஆவது அணி என்ற பெருமை பெற்றது.


இத்தொடரில் ஸ்பெயினின் பார்சிலோனா (2009, 11), பிரேசிலின் கோரின்தியன்ஸ் (2000, 12) அணிகள் தலா 2 முறை கிண்ணம் வென்றன.

சாவ் பாலோ (2005), இன்டர்னாசியோனல் (2006), மிலன் (2007), மான்செஸ்டர் யுனைடெட் (2008), இன்டர்நாஜியோனல் (2010), பேயர்ன் முனிக் (2013) தலா ஒரு முறை கிண்ணத்தை வென்றுள்ளன.

கழக அணிகளுக்கு இடையிலான 11வது 'பிபா' உலகக்கிண்ண காற்பந்து தொடர் மொராக்கோவில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (க)



## இலங்கைக்கு எதிரான போட்டியில் கோரி ஆண்டர்சன் நீக்கம்



நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி 26 ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் ஆரம்பமாகும்.

இப் போட்டிக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டது. இதில் கோரி ஆண்டர்சன் சேர்க்கப்படவில்லை.

பாகிஸ்தானுக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் விளையாடும் போது இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆண்டர்சன் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

நியூசிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருப்பதால் மார்க் கிரேக் என்ற ஒரே ஒரு சுழற்பந்து வீச்சாளா மட்டுமே அணியில் இடம்பெற்றுள்ளார்.

இவர் பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்டின் முதல் இன்னிங்சில் 94 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து 7 விக்கெட்டும், இரண்டாவது இன்னிங்ஸில் 109 ஓட்டங்கள வட்டுக்கொடுத்து 3 விக்கெட்டும வீழ்த்தி அணியின் வெற்றிக்கு வழிவகுத்தவர்.

பாகிஸ்தானின் தொடரில் தொடக்க வீரராக களம் இறங்கிய அணித் தலைவர் பிராண்டன் மெக்கல்லம் நடுவீரராக களம் இறங்குவார் எனவும், அதற்குப்பதிலாக எட்கார் தொடக்க வீரராக களம் இறங்குவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நியூசிலாந்து அணி வீரர்கள விபரம்**

பிராண்டன் மெக்கல்லம் (அணித்தலைவர்), டிரென்ட் போல்ட், பிரேஸ்வெல், டியான பிரௌன்லி, மார்க கிரேக், லாதம், ஜேம்ஸ் நீசம், ரூதர் போர்டு, டிம சவுதி, ராஸ் டெய்லர், நீல் வாகனர், வாட்லிங் (விக்கெட் கீப்பர்), கேன் வில்லியம்சன். (க)

விளையாட்டுச் செய்திகள்

## டக்-அவுட் சாதனையில் டோனியும் இணைவு



இந்திய அணித்தலைவர் டோனி டெஸ்ட் போட்டிகளில் 8 முறை ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் டக்-அவுட் ஆகி சாதனை பட்டியலில் இணைந்துள்ளார்.

அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி அடிலெய்டு மற்றும் பிரிஸ்பேனில் நடைபெற்ற 2 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது.

பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் அணித்தலைவராக விளையாடிய டோனி, 2 ஆவது இன்னிங்ஸில் ஜோஷ் ஹேசில் வுட் வீசிய பந்தை எதிர்கொண்டு ஆட முயன்று டக்-அவுட் ஆகி பெவிலியனுக்குத் திரும்பினார்.

இதன் மூலம் 8 முறை டக் அவுட் என்ற சாதனையை நிகழ்த்தி 3ஆவது இடத்தில் இருக்கிறார் டோனி. இவருடன் இங்கிலாந்தின் ஆதெர்டன், தென்னாபிரிக்காவின் குரோஞ்சியும் இந்த 8 முறை டக்-அவுட் சாதனையை பகிர்ந்து கொள்கின்றனர்.

முதல் இரண்டு இடங்களில நியூசிலாந்து அணித்தலைவராக இருந்த ஸ்டீவன் பிளெமிங் (13 முறை), தென்னாபிரிக்க அணித்தலைவர் சுமித் (10 முறை) ஆகியோர் இருக்கின்றனர்.

இங்கிலாந்தின் ஆலன் பார்டர், சாப்பெல், ஜெயசூரியா, ஜெயவர்த்தனே, பட்டோடி, பொண்டிங் உள்ளிட்டோர் 7 முறையும், கபில்தேவ், அர்ஜுன ரணதுங்க, சம்மி உள்ளிட்டோர் 6 முறையும் அணித்தலைவராக இருந்து டக்-அவுட் ஆகி சாதனை படைத்திருக்கின்றனர். (க)

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஷகிட் அப்ரிடி ஓய்வு



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு பிறகு ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷகிட் அப்ரிடி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும் போது,

நல்ல நிலைமையில் இருக்கும்போதே ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுவிட வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு இதுதான் சரியான நேரம் என்று நினைக்கிறேன். அதன்பிறகு 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் கவனம் செலுத்துவேன்.

சரியான நேரத்தில் இந்த முடிவை எடுக்கக்கூடிய தைரியம் எனக்கு உண்டானதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், கடந்த காலங்களில் என்னை விட பெரிய வீரர்களெல்லாம் சரியான நேரத்தில் இதை போன்ற முடிவை எடுக்க முடியாமல் திணறி உள்ளனர்.

அடுத்த 20 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடைபெற இருக்கிறது. இதில் பாகிஸ்தான் கிண்ணத்தை வெல்ல வேணடும் என்பதுதான் என் ஆசை.

உலகக்கிண்ணப் போட்டிக்கு பிறகு ஏராளமான 20 ஓவர் போட்டியில் விளையாடுவேன். 2016 ஆம் ஆண்டு நடைபெறும் 20 ஓவர் உலகக் கிண்ண போட்டிக்கு வலுமையான பாகிஸ்தான் அணியை உருவாக்க முயற்சி செய்வேன்.

முறையாக ஓய்வு திகதி அறிவித்து செல்லும் முதல் பாகிஸ்தான் வீரனாக நானாகத்தான் இருப்பேன். இதுவே எனக்கு போதும். ஒருநாள் போட்டியில் நான் அதிகளவில் சாதித்து விட்டேன் என்றார்.

34 வயதாகும் அப்ரிடி 389 போட்டிகளில் விளையாடி 7870 ஓட்டங்கள் அடித்ததுடன் 391 விக்கெட்டுக்களும் வீழ்த்தியுள்ளார். ஒருநாள் போட்டியில் அதிவேகமாக சதம அடித்து சாதனை படைத்தவர் அப்ரிடி. இவரது சாதனையை 17 வருடங்கள் கழித்து நியூசிலாந்து வீரர் கோரி ஆண்டர்சன் முறியடித்தது குறிபபிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் ஊழ...

கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும் என எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து கினிகத்தேனை நகரில் ஐக்கிய தேசிய கட்சியின் மஸ்கெலியா தொகுதியின் அமைப்பாளர் கே.கே. பியதாஸ ஏற்பாடு செய்திருந்த பொது கூட்டம் கினிகத்தேனை பஸ் தரிப்பிடத்தில் நடைபெற்றது.

அதன்போதே பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

மலையகத்தில் தோட்ட தொழிலாளிகளுக்கு 7 பேர்ச் காணியுடனான வீடுகள் அமைக்க நாம் தீர்மானம் எடுத்திருக்கின்றோம்.

அதுமட்டுமில்லாமல் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவும், சுகாதாரத்துறையை மேம்படுத்தவும், இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கவும் நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

மக்களின் பிரச்சினைகளை அறிந்து செயற்பட வேண்டும்.

வருமானத்தை அதிகரிப்பதற்கும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கூடியவகையில்விலைகளை குறைப்பதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். (எ-11)

## காங்கேசன்துறை...

காணப்படுகிறது. இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் என்பன ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது குறித்து இது வரை எந்த விதமான அறிவிப்புக்களையும் வெளியிடவில்லை.

இந்த நிலையில் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எதிரணியினர் எதிர்வரும் 30-ம் திகதி பரப்புரைகளை வடக்கில் ஆரம்பிக்க உள்ளனர். அவரை தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் பரப்புரையில் ஈடுபடவுள்ளனர்.

இதன் ஒரு அங்கமாகவே யாழிலிருந்து காங்கேசன்துறை வரையான பகுதிகளிக்கான ரயில் பாதையினை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன், அந்தப் பகுதியில் தேர்தல் கூட்டம் ஒன்றையும் நடத்த திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

## தபால் மூல...

யில் பாதுகாக்கப்படும் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் இடமொன்றில் வாக்களிப்பதற்கான தடை அல்லது அச்சுறுத்தலை எவரேனும் ஏற்படுத்தினாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஜெனிவா நெரு...

செய்யப்படுவது இலங்கை நலன்களுக்கு விரோதமாக அமையும்.

இத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வெற்றி பெற்றால், நாடு அதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு முடிவு கட்டப்படாமல் போனால், இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் நிலை ஏற்படலாம் என்றார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இழுத்துச் செல்லப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும்.

போர் முடிந்த பின்னர் இலங்கை ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் தான் பொறுப்புக்கூறல் குறித்து விசாரிக்க ஐ.நாவை அழைத்தனர் என்பதை அவர்கள் இப்போது மறந்து விட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## பிரி.தூதுவரா...

லும் நிலையிலேயே டோரிஸின் நியமனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

1995ம் ஆண்டு இராஜதந்திர சேவையில் இணைந்தார்.

இதன்பின்னர் பெருவில் தூதுவராக செயற்பட்டார்.

அத்துடன் ரஷ்யா, கொலம்பியா போன்ற நாடுகளிலும் சேவையாற்றியுள்ளார். (எ-11)

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

47/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம், இலங்கை.

### திரிசவிய செயற்றிட்டம் - 2015

மாற்றுவலுவுடையோர்களுக்கான சுயதொழில் பயிற்சிக்கான

### விண்ணப்பம் கோரல்

மேற்படித் திட்டத்தின் கீழ் 3 மாதங்களைக் கொண்ட கைவினை உற்பத்திப் பொருட்களுக்கான (Handicraft) பயிற்சி வகுப்புக்கள் 01.01.2015ஆம் திகதி முதல் நடைபெறவிருப்பதால் ஆர்வமுள்ள மாற்றுவலுவுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் மாற்றுவலுவுடையோர்கள் காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று எதிர்வரும் 28.12.2014ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு **021-321 7718**

வைத்திய கலாநிதி **என்.சிவராஜா**
தலைவர் - **AROD**

(9463)

## 7ம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 19 - 01 - 1921

விண்ணில் 10 - 01 - 2008

அமரர்

### தவசிப்பிள்ளை-இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற பஸ் காப்பாளர்)

திதி-மார்கழிப் பூர்வபக்க துதியை 23.12.2014

எத்தனை விரைவாய் ஏழாண்டு சென்றதையா
சித்தம் நிறைய சிறப்பாய் உங்கள் நினைவுகள்
அத்தனையும் எம்முள்ளே இன்றும் அன்றுபோல்
பத்திரமாய் பவித்திரமாய் பாசமாய் பார்த்திருக்கும்

(இ)

243, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2013 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 14.02.2015 தொடக்கம் காலை 08.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
| --- | --- |
| யாழ் ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | --------- |
| நெல்லியடி | --------- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,

(சி-9456)

பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 05 - 04 - 1937

உதிர்வு 23 - 11 - 2014

அமரர்

### கிருஷ்ணபிள்ளை சின்னப்பிள்ளை

கருவறையில் வீற்றிருக்கும் இறைவனைப் போல்
எம் இதயக் கோவிலில் குடிகொண்ட என் தெய்வமே
எனை வறுமையிலும் சீரும் சிறப்புடனும் வளர்த்து
நான் நன்றாக வாழ்வதை பார்க்காது
இடையில் சென்றது ஏனோ அம்மா!
தாய்க்குத் தாயாகவும் தந்தைக்கு தந்தையாகவும்
இருந்த மாமியே
மருமகன் என்றழைக்காது மகன் என்றே எண்ணி
தன் அன்பையும் பாசத்தையும் கொட்டி வளர்த்த
என் அன்புத் தெய்வம் எமைவிட்டு சென்றது ஏனோ மாமி!
தன் உதிரத்தை வியர்வையாக சிந்தி தன் இன்ப
துன்பத்தைப் பாராது
தன் பிள்ளையைப் போன்று எமை வளர்த்த எம் அம்மம்மாவே
எமக்கு ஆறுதல் இன்றி எமை தனிமையில் விட்டு விட்டு
திரும்பி வரமுடியாத இறைவனடி சேர்ந்தது ஏனோ அம்மம்மா
ஆனாலும் நீங்க சக்கோட்டை பிள்ளையார்
திருவடியைச் சேர்ந்ததை எண்ணி ஆறுதலடைகின்றோம்

(சி-9165)

"திலீபம்"
கொற்றாவத்தை
23.12.2014

நீங்க நினைவுடன்
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.



வாணி ரெக்ஸ் வழங்கும்
விசேட விலைக் கழிவுகள்

எதிர்வரும் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு சகல விதமான புடைவை வகைகளுக்கும் விசேட விலைக் கழிவுகள். 10 % – 25 % வரை ஒவ்வொரு பொருட்களுக்கும் உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
தரமான தெரிவுகளுக்கு முந்துங்கள்.

இச்சலுகைகள் 18.12.2014 முதல் 31.12.2014 வரை மட்டுமே



வாணிரெக்ஸ்
இல. 81 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி :-
021 222 5578
021 222 9286

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல்வியடையேன்...

ழின் கேள்விகளுக்கு அளித்த பதிலிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உறுதி மொழியை அளித்துள்ளார்.

எனினும், நான் தோல்வியடைப் போவதில்லை என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, முதிர்ச்சியடைந்த, துடிப்புள்ள ஜனநாயகமான இலங்கையில் அமைதியான முறையிலேயே ஆட்சி கைமாற்றங்கள் நடந்துள்ளன என்றும் கூறியுள்ளார்.

ஆனால், மீண்டும் நான் கூறுகின்றேன். நாங்கள் வெற்றியடைவோம் என்று நான் நம்பிக்கையுடன் இருக்கின்றேன் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை மேற்குலகம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகக் கூறியுள்ள ஃபைனான்ஸியல் டைம்ஸ் செய்தியாளர், புதிய அரசாங்கம் உள்நாட்டு யுத்தத்தின்போது நடந்துள்ள போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் என்ற நம்பிக்கை மேற்குலகிடம் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதேபோல, இலங்கை அரசாங்கம் உத்தேசித்துள்ள 8 வீத பொருளாதார வளர்ச்சி எதிர பார்ப்பினால் சர்வதேச முதலீட்டாளர்கள் ஆர்வமடைந்துள்ளதாகவும் ஃபைனான்ஸியல் டைம்ஸ் கூறியுள்ளது.

எதிர்வரும் 8-ம் திகதி நடக்கவுள்ள தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் மிகவும் கடுமையான போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மிகவும் சொற்பமான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி ஏற்பட்டால், ராஜபக்ஷ குடும்பத்தின் ஆதிக்கம் நிலவும் ஆட்சியை தொடர்ந்தும் தக்க வைத்திருக்க வன்முறைகளும் ஸ்திரமற்ற நிலைமைகளும் உருவாகலாம் என்று உள்நாட்டு அவதானிகள் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-11)

## சீரற்ற காலநிலை...

வுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ரியாஸ் தெரிவிக்கின்றார். (எ-11)

## சர்வதேச...

டும்.

போர் தொடர்பாகவும், ஜெனிவா விவகாரம் தொடர்பாகவும் எதிரணியினர் முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(எ-11)

## நேற்று...

என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதன்படி மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பர் என்று கூறப்படுகிறது.

எனினும் அரசாங்கத்தில் இருந்து விலகி பொதுவேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டிய பாரிய அழுத்தத்துக்கு கட்சி தலைமை தள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(எ-11)

## அமைச்சர் ரிசாத்...

புதிய அரசியல் பயணத்தில் இணைந்து கொண்டுள்ளதாக ரிசாத் பதியுதீன் இங்கு தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான துணையமைச்சர் எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லா ஏற்கெனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தனது ஆதரவை வழங்கி வருகின்றார்.

அரசாங்க தரப்பினருக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பலனாகவே, இம்மாத முற்பகுதியில் அரசாங்கக் கூட்டணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எச்.எம். அஸ்வர் தனது பதவியை இராஜினமா செய்திருந்தார். அந்த வெற்றிடத்திற்கு எஸ். எச். அமீர் அலி நியமனம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஜனாதிபதித்...

பட்டவேளை அதனை தடுப்பதற்கு பொலிஸார் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

தேர்தல்கள் என்பது அரசியல் உரிமையின ஒரு பகுதி என சுட்டிக்காட்டியுள்ள கபே அமைபபின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், ஒரு நிலைப்பாட்டை கொண்டிருப்பதற்கான உரிமை மற்றும் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், எதிரணி செயற்பாட்டாளர்களின் நடமாட்ட சுதந்திரம் என்பன மீறப்படுவதாக சுட்டிக் காட்டி உள்ளார். வீதி நாடக கலைஞர்கள் பல அரசாங்கங்களுக்கு எதி ராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளனர், எனினும் அவர்கள் தாக்கப்பட்டது இதுவே முதல்தடவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிரணி உறுப்பினர்களின் அரசியல் உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுகின்றன, இதனால் இந்த தேர்தல் சர்வதேச தராதரத்திலானதாக காணப்படவில்லை, தேர்தல் வாக்களிப்பு தினத்தன்று மோசடிகள் நடைபெற்றால் தான் பதவியை இராஜினாமா செய்வதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். எனினும் தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் தினங்களில் பாரிய மோசடிகள் இடம் பெறுவதில்லை,அதற்கு முந்தைய தினங்களிலேயே வன்முறைகள் இடம் பெறுகின்றன என்பதை அவரிற்கு நாங்கள் நினைவுபடுத்த விரும்புகிறோம் என கபே குறிப்பிட்டுள்ளது. (எ-11)


**A/L-2017 வர்த்தகப் பிரிவு மாணவர்**

பொருளியல் பேராசான் S.வரதராஜன் அமரத்துவம் அடைந்து விட்டாரே நாம் இனி யாரிடம் பொருளியலைக் கற்பது...

2017 வர்த்தகப் பிரிவு மற்றைய மாணவர்-ஐயம் வேண்டாம்

அவரது இடத்தை நிரப்ப பேராசானின் வாரிசு S.ஜெயக்குமார் சேர் இருக்கிறாரே

A/L-2017 பொருளியல் S.ஜெயக்குமார் MA(Eco)

DCM யாழ்.நகர் 8.00AM ஆரம்பம்-ஜனவரி 3 சுன்னாகம் 3.00PM

(சி-9471)

**ACS Technology System (pvt) Ltd**

O/L எடுத்த மாணவர்களுக்கான கணனி வகுப்புக்களும் A/L 2017 மாணவர்களுக்கான தொழில்நுட்ப பிரிவுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

- அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியர்களின் விரிவுரைகள்
- Multi Media Projector மூலமான கற்பித்தல் செயற்பாடு.

பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:-0789072260, 0783035181

இடம்:-1-ம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை.

(சி-9464)

**NEC**

ஆரம்பம் 03.01.2015

A/L 2017

கலை வர்த்தகம் கணிதம் உயிரியல் தொழில் நுட்பம்

**விற்பனைக்கு**

அச்சுவேலி நகரப் பகுதியில் (பாடசாலை வீதியில்) 250M உள் பகுதியாக வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0773827188

(8837)

**அம்பிகை புத்தக நிலையம்**

பாலர் முதல் பாடசாலை உயர்வகுப்பு வரை உள்ள மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய உதயமாகியுள்ளது.

2015 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக்கப்பட்ட பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள், மற்றும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகிதாதிகள் பொருட்களையும் அனைத்து இந்திய வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து புத்தகங்களுக்கும் 20%, பாடசாலை உபகரணங்களுக்கு 10%, அப்பியாசக் கொப்பிகளுக்கு 30 - 40% விசேட விலைக் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். (சி-9453)

**அம்பிகை புத்தக நிலையம்**

246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சத்திர சந்திக்கு அருகாமையில்) (கொட்டடிப்பக்கம்)

தொடர்புகளுக்கு : 021 - 561 9294, 077 8875357, 077 8349507

**விசேட கட்டணத்தில் நிறைவான,விரைவான சேவை**

0773083820



30.12.2014 வரை

சென்னை 23000/- RTN

லண்டன் 62900/- OW

கனடா 100500/- OW

டோகா 18200/- OW

இத்தாலி 98500/-RTN

Licence no: A-791

(சி-9470)

**A/L-2015 நாடகமும் அரங்கியலும் Paper Classes**

S.R.ரமேஸ்

சனி, ஞாயிறு-11.00 am

DCM யாழ்.நகர்

(சி-9472)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

**NEW SCIENCE WORLD**

Navalar Road - Brown road Junction, Jaffna.
Web : www.physicsocean.com
E-mail : info@physicsocean.com
Telephone : 077 336 4055

G.C.E(A/L) 2017 SCIENCE STREAM

| தமிழ்மொழி மூலம் | | English Medium | |
|---|---|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குமரன், திரு. R. குகன் | Physics | Mr. R.Kumaran |
| இரசாயனவியல் | திரு. டயஸ், திரு. T. சிவகுமார் | Chemistry | Mr. Dias |
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன், திரு. V. உமாசங்கர் (கொழும்பு முன்னணி உயிரியல் ஆசிரியர்) | Biology | Mr. V. Umashanger (Leading Biology Teacher- Colombo) |

ஆரம்பம் :- 23.12.2014 செவ்வாய காலை 07.00 மணி

வகுப்புக்கள் யாவும் 23.12.2014 இன்று காலை 07.00மணி முதல் நடைபெறுகின்றன.

(சி-9469)

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு KKJ FURNITURE SALES CENTRE வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை

மெத்தை, கட்டில், சோபா, அலுமாரி, Computer மேசை, ரீவிஸ்ரான்ட், பிளாஸ்ரிக் கதிரைகள், மரத்தளபாடங்கள் மற்றும் அனைத்து வீட்டு தளபாடப் பொருட்களையும் 15% வரையான விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

**KKJ தளபாட விற்பனை நிலையம்**

391, K.K.S Road, யாழ்ப்பாணம்.

(சிவன் கோவிலுக்கு அருகாமை) 0779037203

(சி-9455)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org